Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

15 MAR 2004

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

TOSHIBA

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான ஏட இலங்கையின் ஏகமுகவர்

IIS Office Automation

No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 24 (16.03.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :168

## கிழக்குப் பகுதி நிலவரம் குறித்து பல்கலைக்கழகத்தில் விளக்கம்!

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாண நிலவரம் தொடர்பான விளக்கக் கூட்டம் ஒன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமான கருத்தரங்கில், புலிகளின் குரல் பொறுப்பாளர் ஜவான், கிழக்கு மாகாண மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் கிழக்கு மாகாண நிலவரங்கள் தொடர்பாகச் விளக்கிக் கூறினர்.

தொடர்ந்து கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாக கைலாசபதி கலையரங்கில் கூடியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்கு கரிகாலன் பதில்களை வழங்கினார்.

தேசியத் தலைவர் தொடர்பாகவும், தலைவரின் அணியின் கீழ் செயற்பட புலிகளும் மக்களும் ஒரு அணியில் நிற்கின்றோம் என்ற பொருளிலும் கரிகாலன் பதில்களை வழங்கிய போது, கூடியிருந்த மாணவர்கள் மகிழ்ச்சியால் கரவொலி எழுப்பி அந்தக் கருத்துக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு நிலவரங்களை அறிய கைலாசபதி கலையரங்கு நிறைய மாணவர் கூட்டம் கூடியிருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## தேர்தல் பிரசாரங்களைத் தவிர வேறெதிலும் தலையிடக்கூடாது!

### கிழக்கு வேட்பாளருக்கு கருணா எச்சரிக்கை!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட கருணாவுக்கும் இடையிலான பிரச்சினை அவர்களுடையது அவர்களால் தீர்க்கப்படவேண்டியது. நாங்கள் ஒரு வேட்பாளராகத்தான் இருக்க விரும்புகிறோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளரான அரியநாயகம் சந்திரநேரு - கிழக்கில் கருணாவின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்து உரையாடியது பற்றி பி.பி.சி தமிழோசைக்குத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கருணா தரப்பில் விசு, றொபேட், பாபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுபற்றி அரியநாயகம் சந்திரநேரு கருத்துத் தெரிவிக்கையில் -

வேட்பாளர்கள் வேறு எந்த விடயங்களிலும் தலையிடாமல் தேர்தல் பிரசாரத்தில் மட்டும் ஈடுபடவேண்டும் என கருணாவின் பிரதிநிதிகள் எச்சரிக்கை செய்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த சூனியப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க படைத் தளபதிகள் மறுப்புத் தெரிவிப்பு!

## ஐ.தே.கவின் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது!

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூகங்களுக்கும் நீதியும், நேர்மையானதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமது கட்சி முன்வைக்கும் யோசனை என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவது என்று தமது அரசாங்கம் பெற்றுக்கொடுத்த உறுதியான அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதும், இரண்டாண்டுகால யுத்த நிறுத்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 25 ஆம் திகதியே இறுதி முடிவு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக யுத்த சூனியப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு முப்படைத் தளபதிகளும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.**

**தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட முப்படைத் தளபதிகளும் தமது இந்த மறுப்பை தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்தனர்.**

வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வசதி கருதி வாக்களிப்பு நிலையங்களை யுத்த சூனியப் பிரதேசங்களில் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு முப்படைத் தளபதிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி – பிரதமருடன் சொல்ஹெய்ம் பேச்சு!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையிலும், அலரிமாளிகையிலும் தனித்தனியாக இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், மிலிந்த மொறகொட, பேர்னாட் குணதிலக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது!

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூகங்களுக்கும் நீதியும், நேர்மையானதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமது கட்சி முன்வைக்கும் யோசனை என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவது என்று தமது அரசாங்கம் பெற்றுக்கொடுத்த உறுதியான அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதும், இரண்டாண்டுகால யுத்த நிறுத்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 25 ஆம் திகதியே இறுதி முடிவு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக யுத்த சூனியப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு முப்படைத் தளபதிகளும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.**

**தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட முப்படைத் தளபதிகளும் தமது இந்த மறுப்பை தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்தனர்.**

வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வசதி கருதி வாக்களிப்பு நிலையங்களை யுத்த சூனியப் பிரதேசங்களில் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு முப்படைத் தளபதிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - பிரதமருடன் சொல்ஹெய்ம் பேச்சு!

(கொழும்பு)


நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையிலும், அலரிமாளிகையிலும் தனித்தனியாக இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், மிலிந்த மொறகொட, பேர்னாட் குணதிலக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலைப் போராளிகளை விடவும் ஐக்கிய முன்னணி அபாயகரமானது!



## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் போராளிகளை விடவும், ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டில் உருவாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அபாயகரமானவர்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருநாகலில் நடந்த தேர்தல் பிரசார பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த பிரதமர் கதிர்காமராம்; கூட்டத்தில் சந்திரிகா அறிவிப்பு!




(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஆட்சியில் தற்போதைய ஊடகத்துறை அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராக நியமிக்கப்படவுள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதி செயலகத்தில் நடந்த வர்த்தக சமூகத்துடனான சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)



# சிப்பாயைத் தேடும் பணி நேற்றும் தொடர்ந்தது!

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை இராணுவ சிப்பாய் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்சென்ற இராணுவச் சிப்பாயை பொலிஸாரும் இராணுவப் பொலிஸாரும் தொடர்ந்து தேடிவருவதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நேற்று முன்தினம் அதிகாலை 1.20 மணியளவில் காவலரணில் நித்திரையிலிருந்த சிப்பாயை மேலதிகாரி எழுப்பும்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் அவர் மீது துப்பியோடிய சிப்பாய் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை தெரிந்ததே.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பலியான இந்தியப் படையினருக்கு கொழும்பில் நினைவுக் கற்கள் நிறுவத் திட்டம்!

(புதுடெல்கி)

இலங்கையில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் சமாதானப்படை என்ற பெயரில் தங்கியிருந்து உயிரிழந்த இந்தியப் படையினருக்கு கொழும்பில் அடுத்த மாதம் கல்லறைகளை எழுப்புவதன் மூலம் இந்தியப்படையின் உணர்வுகளைத் தணிக்க இலங்கை முயல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிய நாடொன்றில் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காக போராடி மடிந்தவர்களுக்கு கல்லறை அமைக்க நிதி மற்றும் நிலம் ஆகியவற்றை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போஎயார் — EXPOAIR

வான் வெளியில் உங்கள் நண்பன்..

your friend in the skies...

# பிரதேசவாதத்தைத் தூண்டுவோருடன் கருணா தொடர்புகளை வைத்துள்ளார்!

## கிழக்கு மூத்த உறுப்பினர் கரிகாலன்



யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கிழக்கு நிலைவரம் தொடர்பாக விளக்கிக் கூறப்பட்ட கலந்துரையாடலில் பங்குபற்றிய பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கேட்ட கேள்விகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண மூத்த உறுப்பினர் கரிகாலன் அளித்த பதில்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

பிரதேசவாதத்தைத் தூண்டுகின்ற சில கல்விமான்களும் இருந்திருக்கின்றார்கள். மட்டக்களப்பைச் சார்ந்தவர்களும் மட்டக்களப்பு யாழ்ப்பாண கலப்பினை உடையவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

தனியே மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களை விட் அவருடைய தாய், தந்தை, மூதாதையர்கள் பிரதேசவாத துவேசத்தை கிளறுபவர்களில் மிக வேகமாக இருக்கின்றார்கள். அவர்களின் பின்னணியை ஆராய்கின்றபோது, நாங்கள் அறிந்த உண்மை இது.

அவ்வாறான கலப்பில் உள்ளவர்கள் பிரதேசவாதத்தைத் தூண்டுவதிலே மிக முக்கியமானவர்களாகவுள்ளனர். அவர்களுடைய தொடர்பு கருணாவுக்கு இருந்தது என்பதை நாங்கள் உறுதியாகக் கூறமுடியும். ஏனென்றால் - கருணா வெளிநாடு சென்றிருந்தபோது, கருணாவை பலர் சந்தித்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கருணா கூறியிருக்கிறார் - நீங்கள் மட்டக்களப்பில் வந்து என்னைச் சந்தியுங்கள் என்று.

ஒரு மாத இடைவெளிக்குள் பல சந்திப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன. தனக்குள்ளே இவர் ஏதோ ஒரு திட்டம் வைத்திருந்த காரணத்தினால் அதனை வெளிப்படுத்துவதற்கான ஒரு காலப்பகுதியாக இவருடைய மோசடி நடவடிக்கைகள் அம்பலப்படுத்தப்பட்டதும், இவர் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு தன்னை இயக்கத்தில் இருந்து பிரித்துக்கொள்வதற்காகவோ அல்லது பேச்சுவார்த்தையை இல்லாமல் செய்து மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தவோ கருதி அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார் என்பதை மட்டும் எங்களால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

வெளிநாட்டு சக்தியின் தலையீடு என்று குறிப்பிட்டுச் சொல்வது தற்போது நாம் திடமாக நம்புவது அமெரிக்க சக்தியென்றுதான் நாங்கள் குறிப்பிடுவோம். அமெரிக்காவின் பின்னணியில்தான் கருணா செயற்படுகின்றார் என்பதைத் தான் நாங்கள் நம்பமுடிகின்றது. இந்தியாவை - இதற்கு இடையிலே நிறுத்தப் பார்க்கிறார்கள்.

ஆனால், இலங்கை இராணுவத்தோடு இணைந்தும், இலங்கை அரசோடு இணைந்தும் செயற்படுகின்றாரோ என்பதைக் கூறமுடியாது. ஏனெனில் - ஸ்திரமான அரசு தற்போது இல்லை.

இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் கருணாவோடு அடிக்கடி தொடர்பை வைத்திருக்கின்றனர். படைகளை நகர்த்துவதற்கும், பின்நகர்த்துவதற்கும் உதவி புரிந்து கொண்டு வருகிறார்கள். ஆயுதங்களோடு நகர்ந்து வாகரைக்கு வருவதற்கு படையினரின் ஒத்துழைப்பு இருக்கின்றது. இரவு நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பாதுகாப்பதில் தற்போது இராணுவம் முன்னிற்கின்றது. இராணுவத்தின் செயற்பாடுகளுடன் இணைந்துதான் இவருடைய பின்னணி இருந்துள்ளது என்பதுதான் எமது நிலைப்பாடு.

கருணா இவ்வளவு காலமும் தலைவர் மீது வைத்திருந்த பற்றுதல் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. தலைவர் தன் மீது நல்ல பற்று வைத்திருக்கின்றார் என்பது கருணாவுக்குத் தெரியும். இந்த நிலையில், எப்படி தலைவரை குற்றவாளியாக்க முடியும் என்ற திட்டத்தை தானே வகுத்து பத்திரிகையாளர்களுக்கு தனது கருத்தைத் தெரிவித்துள்ளார். அதிலே ஒன்றுதான் ஆயிரம் போராளிகளை தலைவர் கேட்டிருக்கின்றார். மீண்டும் சண்டையை தொடக்கப்போகின்றார் என்றெல்லாம் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்திருக்கின்றார். இவையெல்லாம் உண்மை இல்லையென்பது பின்னர்தான் மக்களுக்கு நாங்கள் விளக்கிக் கூறி தெளிவாக்கினோம்.

யுத்தம் என்றால் யுத்தத்தை யுத்தமாகச் செய்ய வேணடும், சமாதானம் என்றால் சமாதானத்தை சமாதானமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே தலைவரின் நிலைப்பாடு.

இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இன்றைக்கு சமாதான முயற்சிகளில் எல்லா நாடுகளும் துணிந்து ஈடுபடுகின்றன என்றால் தலைவர் சொன்னதைச் செய்வார் என்ற நம்பிக்கையாகும்.

ஆகவே, ஆயிரம் போராளிகளை கருணாவிடம் கேட்டது என்பது அப்பட்டமான பொய். தலைவர் அவ்வாறு கேட்கவில்லை. தன்னை நியாயப்படுத்தி, மட்டக்களப்பு மக்கள் மத்தியில் ஆதரவைத் திரட்டவேண்டும் என்பதற்காக சோடிக்கப்பட்ட பொய் என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும்.

கருணாவின் பாலியல் நடவடிக்கை பற்றி பரவலாகப் பேசப்படுகின்றது. உண்மையா என்று கேட்கப்படுகின்றது.

கருணா முடிவை எடுப்பதற்கு பிரிந்து செல்வதற்கான மூலகாரணம் அதுவும் ஒன்று. தான் மக்களின் மத்தியிலேயே துர்நடத்தைக் குரியவன் என்று வெளிப்படுத்தப்பட்டுவிடுவேனோ என்ற அச்சம் காரணமாகவே தலைவரைச் சந்தித்து அவரோடு கதைக்க முடியவில்லை. இந்தச் செய்தி தலைவருக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு செய்தி.

இந்தச் செய்தியை பல போராளிகள் நேரடியாகக் கண்டிருக்கிறார்கள். அவ்வாறு கண்டவர்கள் -கருணாவால் தண்டனைக்குட்படுத்தப்பட்டு தற்போதுதான் வெளியில் வந்துள்ளார்கள். இவையெல்லாம் தளபதிகள் மட்டத்திலே தெரிந்த ஒரு உண்மை. இந்த உண்மைகளை மறைத்து தான் ஒரு நிரபராதி எனக் காட்டவே கருணா முயன்றிருக்கிறார்.

சுயமான நிலையிலும் கருணா எந்த முடிவையும் எடுக்கவில்லை. அவ்வாறு செயற்பட்டிருந்தால் அவரிடம் நியாயப்பாடுகளை கூறும்போது, அவர் ஏற்றுக்கொண்டிருப்பார்.

துரோகிகளுக்கு எப்படி, என்ன தண்டனை கொடுப்பது என்பது எனக்குத் தெரியும். ஒரு விசரனுக்கு என்ன தண்டனையைக் கொடுப்பது என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் என்று தலைவர் கூறியிருக்கிறார். சரியாக அவர் எடை போட்டிருக்கிறார்.

படைகளைப் பற்றியோ பின்னணியைப் பற்றியோ கருணா யோசித்து செயற்படவில்லை. ஏனென்றால், தன்னோடு நிற்கும் போராளிகளிடம் கருணா இவ்வாறு கூறியுள்ளார். நீங்கள் விரும்பினால் வீட்டை போய் நிற்கலாம் என்றுதான் இன்றும் சொல்லிக்கொண்டிருப்பதாக காலைச் செய்திகள் எமக்குத் தெரிவிக்கின்றன. அவர் போராடத் தயார் இல்லை.

கருணா பல பொய்களை அங்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். அதற்கு பக்கபலமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் பல பொய்களை அடுக்கிக் கொண்டிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து மட்டக்களப்பு மாணவர்கள் அனைவரையும் வெளியேறுமாறு கூறப்பட்டுள்ளது என்ற செய்தியும் இவற்றில் உண்டு.

யாழ்ப்பாணத்தில் 600 இற்கும் மேற்பட்ட மட்டக்களப்பு போராளிகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியும் இவற்றில் ஒன்று. மட்டக்களப்பில் உள்ள போராளிகள் உறுதியாகவுள்ளனர். கருணாவோடு போராளிகள் உரையாடியுள்ளனர். தலைவருக்கு எதிராக நீங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாரான காரணத்தினால் நாங்கள் உங்களுக்கு எதிராகச் செயற்படத் தயாராகிவிட்டோம் என்ற செய்தியை கருணாவிற்குக் கொடுத்துள்ளனர்.

பொய்யான செய்திகள் பல தற்போது உலாவிக்கொண்டிருக்கின்றன.

கருணாவின் நிலைப்பாடு தொடருமாக இருந்தால் என்ன செய்வது? யுத்தம் மூலமாக தீர்க்க முடியுமா? அது சாத்தியமா? என்ற கேள்விகள் வந்துள்ளன.

தலைவர் மிக நிதானமாக இருக்கிறார். கருணாவிற்கு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். எந்த நாட்டிலும் அவர் உயிரோடு வாழ்வதற்கான இறுதிமுயற்சியை செய்து கொண்டிருக்கிறார். கருணாவின் பிடி தற்போது தளர்நது கொண்டு வருகின்றது.

தலைவர் கூறியுள்ளார் ஒரு போராளிக்குக் கூட ஒரு சொட்டு இரத்தமேனும் சிந்தக் கூடாது. கருணா இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். அவரின் உயிருக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. கருணா தொடர்பாக எந்தப் போராளியின் உயிரும் இழக்கப்படக்கூடாது.

கருணா ஒரு கலந்துரையாடலை கிழக்கில் தளபதிகள் மத்தியில் நிகழ்த்தியுள்ளார். அதில் முன்னுக்குப்பின் முரணான செய்திகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்.

தலைவருக்கு எதிராகப் போகமுடியாது என்ற ஒரு வார்த்தையையும் கூறியுள்ளார். அதேவேளை - மிகவும் கஷ்டமாக இருந்தால் ஆமியோடு சேர்ந்துவிடுவது என்றும் கூறியுள்ளார்.

கருணா உறுதியான நிலையில் இல்லை. அவருக்குச் சரியான பின்புலம் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

கருணா இயக்கத்தில் இருந்து விலகிவிட்டால் ஏனைய போராளிகள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்பதுதான் எமது நிலைப்பாடு.

கருணா என்ற தனி மனிதனால் போராட்டம் களங்கப்படுத்தப்பட்டுள்ளது. எமது தலைவருக்கும் மாவீரர்களுக்கும் அவர் செய்த துரோகத்தால் அவருக்கு ஏன் தண்டனை வழங்கவில்லை என்று பலர் கேட்டுள்ளனர். கருணாவின் நடவடிக்கை பற்றி ஏன் முன்னரேயே தெரிந்துகொள்ளவில்லை என்றும் கேட்டுள்ளனர்.

கருணாவை உண்மையில் ஒரு ஆற்றலுள்ள தளபதியாகவே தலைவர் பார்த்துள்ளார். கருணாவைப் பற்றி பல தளபதிகள் குறை சொல்கின்றபோது தலைவர் அதிகம் அதை நம்பவில்லை. கருணாவைப் பற்றி என்னிடம் எதுவும் கதைக்கக்கூடாது என்றும் கருணாவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் என்றும் தலைவர் கூறுவார்.

அந்தளவுக்கு தலைவர் கருணாவின்மீது நம்பிக்கை வைத்துள்ளார். கருணாவும் அந்தளவுக்கு தலைவரோடு நடந்துள்ளார். நாம் கருணா மீது நடவடிக்கை எடுப்பதென்பது இன்றைய சூழலில் உடனடியாகச் சாத்தியமிலலை.

இன்றைய சமாதான காலத்தில் - சூழலில் ஒரு தளபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றபோது மக்களுடைய எதிர்ப்பை சம்பாதித்துக் கொள்ளவேண்டி ஏற்படும். மக்களுக்கு உண்மையான பிரச்சினைகளை நாங்கள் சொல்ல முடியாது.

நடவடிக்கை எடுத்த பின்னர் அதற்கான காரணத்தை நாங்கள் மக்களுக்கு தெளிவாக விளக்க முடியும்.

சண்டைக்காலத்தில் என்றால், இப்படி தண்டனை கொடுப்பதை யாரும் பெரிதாக எடுக்கமாட்டார்கள். எத்தனையோ தளபதிகள் தண்டனையை அனுபவித்து மீண்டும் இயக்கத்தில் இருக்கின்றார்கள். அதுதான் இயக்கத்தின் நடைமுறையாக இருந்து வருகின்றது.

அப்படியொரு காலப்பகுதியில் தான் கருணாவைத் தலைவர் அழைத்திருந்தார். கருணாவை விசாரிப்பதற்குத்தான் தலைவர் அழைத்திருந்தார். கருணா தலைவரைச் சந்தித்திருந்தால், நிலைமை மாறியிருக்கும்.

கருணாவின் நடவடிக்கைகளை அறியாமல் இயக்கம் இருந்ததாக நீங்கள் கருத வேண்டாம். ராஜதந்திர ரீதியில் கருணா தொடர்பான நடவடிக்கையை எடுக்கவேண்டும். அங்கே ஆறாயிரம் போராளிகள் உள்ளனர்.

அதற்காகத்தான் கருணா மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. படைபலத்தை எவ்வளவு சாதுரியமாகப் பயன்படுத்த வேண்டுமோ அதற்காகக் காத்திருக்கின்றோம்.

தேசியத்துக்காக, தேசிய விடுதலை நோக்கி தேசியத் தலைவரை நம்பி வந்த போராளிகள் அநியாயமாக கருணாவிற்காக இரத்தம் சிந்திவிடக்கூடாது என்பதில்தான் இயக்கம் கவனமாகவுள்ளது.

கருணா தான் எடுத்த நடவடிக்கைகளுக்காக புதிய புதிய நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருக்கிறார். ஆரம்பத்தில் தமிழீழப் பொறுப்பாளர்கள் எவரும் இன்றி நேரடியாக தலைவருக்குக்கீழ் செயற்படப்போகின்றேன் என்பதுதான் அவரின் அறிவிப்பாக இருந்தது.

பின்னர் தான் திரும்பவும் இயக்கத்தில் இணைந்து கொள்வதாக இருந்தால் மூன்று முக்கிய பொறுப்பாளர்களான பொட்டம்மான், தமிழேந்தி, நடேசன மூவரையும் இயக்கத்தில் இருந்து விலத்த வேண்டும் என்பதாக இருந்தது.

இவையெல்லாம் குழம்பிய நிலையில் விடுகின்ற கோரிக்கைகள்தான். நிதானமான நிலையிலே அவர் செயற்படவில்லை. புலனாய்வுத்துறையை மட்டக்களப்பில் இயங்கக் கூடாது என்று கூறியுள்ளாரே அதை நீங்கள் கவனத்தில் எடுக்கவில்லையா என்று கேட்டுள்ளார்கள்.

இவையெல்லாம் குறுகிய காலத்தில் நடத்தப்பட்ட செயற்பாடுகள். புலனாய்வுத்துறையைக்கலைத்து இரண்டாம்நாள் இயக்கத்தில் இருந்து விலகுகின்றேன் என்று அறிவிப்பு வெளியிட்டுவிட்டார். 15 நாட்களுக்குள் அடுத்தடுத்து எடுக்கப்பட்ட முடிவுகளும் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகளும்தான் கருணாவின் நடவடிக்கைகள்.

கருணாவும் ஆரம்பகாலத்தில் புலனாய்வுத் துறையில் இருந்து செயற்பட்டவர். புலனாய்வு நடவடிக்கையில் தன்னுடைய குற்றச்சாட்டுக்கள், தான் செய்யும் ஊழல்கள் அம்பலப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில்தான் புலனாய்வுத் துறையைத் தான் பொறுப்பேற்க வேண்டும் என்ற ஒரு நிலை இருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னுடைய அதிகாரம் இன்றி எந்தச் செய்தியையும் வெளியிடக்கூடாது என்ற கட்டளையை கருணா பிறப்பித்திருந்தார். அதிலும் ஒரு முரண்பாடு காணப்பட்டது.

தன்னுடைய செயற்பாடுகள் தலைவரைச் சென்றடையுமோ என்ற அச்சம் காரணமாகவே இத்தகைய நடவடிக்கைகளில் கருணா ஈடுபட்டார்.

பதுமனும், கருணாவும் நெருங்கிய நண்பர்கள். இரண்டுபேரும் பக்கத்து பக்கத்து மாவட்டங்கள். இரண்டு பேரும் சேர்ந்துதான் தலைவரைச் சந்திக்க வருவார்கள். இரண்டு பேருக்குமே தலைவர் அழைப்பு விடுத்திருந்தார்.

பதுமன் வந்து தலைவரைச் சந்தித்து கருணாவின் விடயமாக எடுக்கப்பட வேண்டிய விபரங்கள் தொடர்பாக கதைத்துள்ளார். அவருடைய மாவட்டத்தில்தான் எமது போராளிகளும் நிற்கின்றார்கள். இந்தப் பிரச்சினைக்கு முடிவுகாண்பதற்காக.

தலைவரின் படத்தை எரிக்குமாறு கோரி பிரதேசவாதத்தைத் தூண்டி மிகப்பெரும் அவமானத்தைச் தேடித்தந்த கருணாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மக்களின் அவாவாக உள்ளது.

தண்டனை என்பது வழங்கப்பட வேண்டியதுதான். அந்தத் தண்டனையிலும் ராஜதந்திரங்கள் சில இருக்கலாம். தலைவரைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்தியப்படை இங்கு போரிட்ட நேரத்திலும் இந்தியப்படையை அனுப்புவதற்கு முன்னின்றவர்களுக்காக வழங்கப்பட்ட தண்டனை என்ன என்பதும், எப்போது வழங்கப்பட்டது என்பதும் தெரியும். ஆகவே, நீங்கள் எதிர்பார்க்கின்ற நிலையில் தலைவர் இல்லை என்பதை மட்டும் நான் உங்களுக்குச் சொல்கின்றேன்.

பிரதேசவாதத்தைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளையே கருணா மேற்கொண்டுள்ளார். இதுதொடர்பாக பிரதேசவாதத்தை தூண்டும் வகையில் எந்தவொரு பல்கலைக்கழகமோ தனிமனிதனோ ஈடுபடக்கூடாது என்பதை உறுதியாகச் கூறிக்கொள்ள விரும்புகின்றோன்.

ஊர்ச்சண்டைகளில் வெற்றிபெற்றவன்-ஈடுபட்டவன்தான் நாட்டுக்காகப் போராட வருவான். தலைவரும் இதைக் கூறுவார். ஊர் பற்றிய உணர்வே தேசம் பற்றிய உணர்விற்கும் காரணமாக அமைகின்றது.

ஊர்பற்றிய உணர்வு அனைவருக்கும் உள்ளது. தன் கிராமம் படிக்கவேண்டும், முன்னேறவேண்டும் என்று அனைவரும் விரும்புவர். பிரதேசவாதம் ஒவ்வொருவருக்கும் இருக்கக் கூடிய உணர்வுதான்.

அதனைச் செயற்படுத்துவதில் மற்றவர் மனங்களைப் புண்படுத்தாமல் இருக்க வேண்டும். கருணாவின் இந்தப் பிரதேசவாதத்தை முறியடிக்க நாம் நடவடிக்கை எடுப்போமாக இருந்தால், உழுத்துப்போன பிரதேசவாதத்தை நாட்டில் இல்லாமற் செய்யலாம் என்று உறுதிபடக்கூறி விடைபெறுகின்றேன் என்றார் கரிகாலன்.

யாழ்ப்பாணம்



## அரச ஊழியர்களுக்கான ஏப்ரல் மாதச் சம்பளத்தை மார்ச் இறுதியில் வழங்கவும்

### நிதி அமைச்சருக்குக் கடிதம்

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு, அரசாங்க ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வழங்கப்படவிருந்த சம்பளத்தை - மார்ச் மாதம 31 ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் - மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் கே.என் சொக்ஸிக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது. தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, அரச ஊழியர்களுக்கு கடந்த வருடங்களில் ஏபரல் மாத சம்பளம், ஏபரல் 10 ஆம திகதியளவில் வழங்கப்பட்டு வந்தது.


ஆனால், இம்முறை 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்னர் சனி, ஞாயிறு போயா விடுமுறை வருவதால், அரசாங்க காரியாலயங்கள் 6 ஆம் திகதியே திறக்கப்படும். பின்னர் 9,10,11 ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாகும். எனவே, கடந்த காலங்களைப் போல 10 ஆம் திகதி ஏப்ரல் மாதச் சம்பளத்தை வழங்க முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைப்பு

தபால்மூல வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று தபால மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தேர்தல் அத்தாட்சி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்.மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு இந்தமுறை 4 ஆயிரம் பேர்வரை தகுதி பெற்றிருக்கின்றனர். அவர்களுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டது. இதேவேளை, தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கான சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமான வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைப்பதற்கான பணிகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இளைஞர்களை பலிக்கடாக்களாக்க எமது அரசாங்கம் தயாராக இல்லை

### பிரசாரக் கூட்டத்தில் ரணில்



கடந்த முறை உடன்படிக்கை கைச்சாத்திட நான் இங்கே வந்தேன். இன்று மீண்டும் வந்துள்ளேன். யுத்தத்தை நிறுத்தி, மீண்டும் சாமாதானத்தினை மலரச் செய்யவேண்டும் என்பதற்கான ஆணையினைப்பெற மீண்டும் நான் உங்களிடம் வந்துள்ளேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானம் காரணமாக இன்று வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் மூவின மக்கள் போரின் பீதியின்றி வாழக்கூடியதாக இருக்கின்றது. முன்னர் போன்று இப்போது பாஸ் நடைமுறை இல்லை. எந்த விதமான கெடுபிடிகளும் இன்றி, எல்லா இடங்களுக்கும் போய்வரக்கூடியதாகவும், அனுமதிப்பத்திரம் இன்றி அனைத்துப் பொருட்களையும் பெறக்கூடியவகையில் இந்தச் சமாதானம் ஏற்பட்டுள்ளது.

என்னுடைய கட்சியின் குறிக்கோள் ஒரு ஐக்கியமான இலங்கையினுள் அனைத்து மக்களும் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழவேண்டும் என்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளேன். புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்ட போதிலும். தென்பகுதியில் ஒருமாற்றமும் ஏற்படவில்லை. மீண்டும் யுத்தம் ஏற்படும், நாடு இரண்டாகப் பிளவுபடும் எனும் கோஷங்கள் தான் அங்கு ஏற்பட்டது.

யுத்தநிறுத்தத்தை முறியடித்து, மீண்டும் யுத்தத்திற்கு தாம் போவதாக அவர்கள் கூறுகிறார்கள். யுத்தநிறுத்ததின் நன்மை, தீமையினை நிறுத்திப் பார்த்தபோது - நாட்டினை சமாதானத்தில் கொண்டு போவதற்கான நன்மையே கூடஇருந்தது. ஆனால், சமாதானத்திற்கு விரோதமான கட்சிகள் தென்பகுதியில் இருந்தன. அதுதான் யுத்தத்தினை முன்கொண்டு செல்வதற்கான தலைமையினை மக்கள் ஐக்கிய முன்னணி ஏற்றுள்ளது.

மீண்டும் ஒரு யுத்தத்திற்கு போவதற்கு நாம் தயார் இல்லை. சுமூகமாக பிரச்சினை தீர்க்காததன் காரணமாக அநியாயமாக 60 ஆயித்திற்கு மேற்பட்ட உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. இராணுவமாக இருந்தாலும், புலிகளாக இருந்தாலும் கஷ்டப்பட்டவர்களே இறந்துள்ளனர்.

எனவே, எமது இந்த அரசியலில் அப்பாவி இளைஞர்களைப் பலிக்கடாவாக்க நான் தயார் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச பயங்கரவாதத்தினை மேற்கொண்டவர்கள் சமாதானவான்களாகப் பவனி வருகின்றனர்

### ஜனாதிபதி சந்திரிகா சாடல்



அரச பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள், இன்று சமாதானவான்களாக பவனிவர முயற்சிக்கின்றனர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்றுமுன் தினம் அவர் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவரது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

ஒற்றுமைப்பட்டிருந்த இனங்களைப் பிரித்து இன முரண்பாட்டை ஏற்படுத்தி. அரச பயங்கரவாதத்தை தூண்டிவிட்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்று சமாதானத்தை உருவாக்குவதற்குத் தாமே முழுப்பொறுப்பும் உடையது எனப் பிரசாரம் செய்துவருகின்றது.

அரச அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாலேயே 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் திட்டமிட்ட வன்முறை ஒனறு இடம்பெற்றிருந்தது. அவ்வாறே பெரும்பாலான மக்களின் சீரழிவிற்கும் காரணமாக அமைந்த ஆட்சியை நடத்தியவர்கள் நாட்டை பீதி, அச்சம், யுத்தம், அழிவு முதலானவற்றுக் குட்படுத்தி மக்களைத் துன்புறுத்தியவர்கள் தம்மை ஜனநாயக வாதிகளாகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

வாக்குறுதிகளை மட்டும் வழங்கும் அரசியலையே கடந்த காலங்களில் ஐக்கிய தேசியகட்சி செய்துவந்துள்ளது. இது அனைவருக்கும் தெரிந்தவிடயம்.

அதிக அளவிலானோர் வேலைவாய்ப்பு பெற்றதும், நீதியான சம்பள உயர்பெற்றதும் எமது ஆட்சிக்காலத்திலேதான் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவற்றைத் தொடர்ந்தும் மேற்கொள்ள இந்தமுறை தேர்தலில் மக்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

சிறுவர், பெண்கள், முதியவர் என அனைவரினதும் தேவைகளை உணர்ந்து, சேவையாற்றவே நாம் அரசியலுக்கு வந்துள்ளோம். எனது தனிப்பட்ட குடும்ப வாழ்வில் கணவனை இழந்த நிலையிலும், எனது பிள்ளைகளைக் கூட கவனிக்காது, எனது பெற்றோர் காட்டிய வழியில் அரசியலில் மக்கள் சேவையாளராக வாழ்ந்து வருகின்றேன்.

இன்று எமது நாட்டிற்கு சமாதானம் அவசியம். அதற்காக நீண்டகால அரப்பணிப்புடன் செயற்படவேண்டிய கட்டாய தேவை உண்டு. எமது மக்கள் அனைவரும் கேட்பது சமாதானத்தையே எமக்குத் தெரியும். ஆனால், அந்த சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்ற வேளையிலும் கூட நாம் பலவீனம் அடையக்கூடாது. ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சில் ஈடுபட்ட சமயம் இலங்கையின் முப்படையும், பொலிஸ் படையும் பெரும் பலவீனமான நிலைக்குச் சென்றுள்ளன.

விடுதலைப்புலிகள் ஆயுத பலத்தாலும், ஆட்பலத்தாலும் முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகரித்த நிலையிலுள்ளனர். இதனை விட, பல புதிய முகாம்களையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைத்துள்ளனர்.

இலங்கை ஊடகத்துறை அவர்களின் ஒலிபரப்புச் சேவைக்காக நவீன தொழில் நுட்பக் கருவிகளையும் வழங்கியுள்ளது. இவையெல்லாம் எமது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது என்பதை உணர்ந்தே - முதற்கட்டமாக மூன்று அமைச்சுப் பதவிகளை நான் பொறுப்பேற்றேன். பின்னர் இந்தப் புதிய தேர்தலுக்கு ஆணையிட்டேன்.

எனினும், அரசுடன் இணைந்து செயற்படுவதற்காகப் பல முயற்சிகளையும் மேற்கொண்டேன். அதற்கு எனக்கு போதிய ஒத்துழைப்பை வழங்காது, என்னைக் கீழ்த்தரமாகவும். கூடாதவகையிலும் பிரசாரப்படுத்தினர். என்னைப் பொறுத்த வரையில் இத்தகைய தேர்தல் தேவைதானா என்ற எண்ணம் தோன்றினாலும் நாட்டின் நலனுக்காய் அதை நடத்த வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதினூடாக எமது கட்சி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஏனைய தரப்புக்களுடனும் கலந்தாலோசனை நடத்தி, சரியான தீர்வை இந்தநாட்டில் ஏற்படுத்தி, மக்களை சுபீட்சமான, செல்வம் கொழிக்கும் நிலைக்கு உயர்த்த எண்ணம் கொண்டிருக்கிறோம். நாம் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை எப்போதுமே வழங்கியதில்லை. நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளையே வழங்குகின்றோம். அவற்றை நிறைவேற்ற ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணிக்கு வாக்களித்து உதவுதல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் வவுனியா வந்திருந்த போது அவரைப் பிரசாரமேடைக்கு ஆதரவாளர்கள் அழைத்துச் செல்வதனைப் படத்தில் காணலாம்.

## மலேசியத் தூதுவர் தேர்தல் பிரசாரத்தில்

### ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் றோசி சேனநாயக்க விடுமுறையில் வந்து பிரசாரக் கூட்டங்களில் ஈடுபட்டு வருவதாக - ஜனாதிபதி சநதிரிகா பண்டாரநாயக்க குற்றம்சாட்டியுள்ளார். தூதுவர் றோசி சேனநாயக்கவின் இத்தகைய நடவடிக்கை இராஜ தந்திர நெருக்கடிகளை ஏற்படுகின்றதெனவும் அவர் தெரிவித்தார். றோசி சென நாயக்க பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து வெளிவிவகார அமைச்சர் ரிறோன் பெர்ணான்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார். (01)

## மேலும் 20 பெண்கள் புலிகளிடம் தஞ்சம்

கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மேலும் 20 பெண்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியற்துறையினரிடம் நேற்று முன்தினம் காலை வந்து தஞ்சம் புகுந்தனர்.

தென்னிந்திய அகதி முகாம்களில் வாழ்ந்த பெண்களை மத்திய கிழக்கில் தொழில் பெற்றுத் தருவதாகக்கூறி, சில நபர்கள் தெனனிந்தியாவிலிருந்து மன்னார் ஊடாக அழைத்து வந்து - கொழும்பிலும், வத்தளையிலும் தடுத்துவைத்து சிதரவதை செய்தனர்.

இதனையடுத்து, கடந்த சனிக்கிழமை அங்கிருந்து தப்பித்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரிடம் வந்து 12 பேர் தஞ்சம் புகுநதனர். இவர்களின் விபரங்கள் செய்தி ஊடகங்களில் வெளியான தையடுத்து, மேலும் 20 பெண்கள் நேற்று முன்தினம் காலை வவுனியா வந்தடைந்தனர். இவர்கள் தாம் இவ்வாறான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் அந்தப் பெண்கள் பொய்கூறி இருப்பதாகவும் தெரிவத்தனர். எனினும், இந்தப் பெண்கள் வெளிநாட்டு முகவரகளால் திட்டமிட்டு வவுனியா அரசியற்துறைக்கு அனுப்பபட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

மேலும், அந்த நபர்கள் எந்தவிதமான தொடர்பினையும் வவுனியா அரசியறதுறையினரிடம் மேற்கொள்ளவில்லை. இது இவ்வாறு இருக்க, ஏற்கனவே தப்பிச் சென்ற 14 பெண்களுக்கு உதவிபுரிந்த மன்னார் மாதர் அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் வவுனியா அரசியற்துறைக்கு வந்தனர். தம்மிடம் வந்த பெண்கள் அனைவரையும் தாம் பாதுகாப்பாக உறவினர்களிடம் ஒப்படைத்ததாகவும் அந்த பெண்கள் கூறிய சம்பவங்களுக்கும் வவுனியா அரசியற்துறையினரிடம் தஞ்சம் புகுந்த பெண்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிவிததனர்.

வவுனியா அரசியற்துறையினரிடம கடந்த சனிக்கிழமை வந்தடைந்த அனைவரையும், அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

## பிக்குகளை தாக்கிவிட்டு ஜே.வி.பி மீது பழிமுயற்சி!

பௌத்த பிக்குகளைத் தாக்கிவிட்டு, அதற்கான பழியை ஜே.வி.பியினர்மீது சுமத்துவதற்கு ஐ.தே.க. முயற்சித்து வருவதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது. பண்டாரகமவில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர்.

ஆனால், ஜே.வி.பியினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. பௌத்த பிக்குகளையும், விகாரைகளையும் தாக்கிவிட்டு அதற்கான பொறுப்பினை தமது கட்சியின் மீது சுமத்துவதற்கு மேற்கொண்டுள்ள சதிமுயற்சிகள் தமக்கு ஏற்கனவே தெரியவந்ததாகவும், இது தொடர்பாக இம்மாதம் முதல் வாரத்திலேயே தேர்தல் ஆணை பாளருக்கு அறிவித்ததாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

## இந்திய அணியின்

# பந்துவீச்சில் முன்னேற்றம் தேவை பயிற்சியாளர் ஜோன்ரைட் பேட்டி


இர்பான் பதான் - ஜோன்ரைட்

(ராவல்பிண்டி)

'இந்திய அணியின் பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை' என்று பயிற்சியாளர் ஜோன்ரைட் கூறியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையேயான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ராவல்பிண்டியில் பகல் இரவாக இன்று நடைபெறுகிறது.

இந்த போட்டிக்காக நேற்றுமுன்தினம் ராவல்பிண்டி சென்றடைந்த இந்திய அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

முன்னதாக இந்திய அணி பயிற்சியாளர் ஜோன்ரைட் கூறியதாவது-

இந்திய அணியின் பந்துவீச்சில் பிரச்சினை இருக்கிறது. முதல் 15 ஓவர்களில் நமது வீரர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள். ஆனால், மிடில் ஓவர்களில் பந்துவீச்சு சிறப்பாக இல்லை. இதனை பந்து வீச்சாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இனிவரும் போட்டிகளில் இதனைச் சரி செய்துவிடுவோம். அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் முதல் 15 ஓவர்களில் நமது வீரர்கள் மோசமாக பந்து வீசினார்கள். கராச்சிப் போட்டியில் மிடில் ஓவர்களில் இதே பந்து வீச்சுப் பிரச்சினை எழுந்தது. பந்து வீச்சில் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

முதல் போட்டியில் வென்று தொடரை தொடங்கியிருப்பது சிறப்பானதாகும். நமது அணியின் துடுப்பாட்டம் மிக சிறப்பாக இருக்கிறது. அதேநேரத்தில் பாகிஸ்தான் வீரர்களும் வெற்றியை நெருங்கி வந்தனர். வெற்றி கிட்டிய பிறகே நிம்மதி ஏற்பட்டது. ஒருநாள் போட்டித் தொடரில் போட்டி கடுமையாக இருக்கும். வீரர்கள் நெருக்கடிக்கு இடம் கொடுக்காமல் ஆடி வெற்றி தேடிக்கொடுக்க வேண்டும்.

2 ஆவது ஒருநாள் போட்டிக்கு லக்ஷ்மன் தகுதி அடைந்துவிடுவார் என்று நினைக்கிறேன். களத்தடுப்பிலும் பிரச்சினை நிலவுகிறது என ஜோன்ரைட் கூறினார்.

## மெதுவாக பந்து வீசியதால் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது!

(கராச்சி)

இந்திய - பாகிஸ்தான் அணிகள் கராச்சியில் மோதிய முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் 20 நோபோல் மற்றும் 10 வைட் பந்துகளை வீசினார்கள்.

அதோடு அதிக சிக்ஸர் மற்றும் பவுண்டரிகள் அடிக்கப்பட்டதால் பந்து வீச்சு நேரம் அதிகம் பிடித்தது. எனவே, இரு அணிகளும் மெதுவாக பந்து வீசியதாக ஐ.சி.சி. போட்டி நடுவர் மடுகல அறிவித்தார்.

இதற்காக இரு அணி வீரர்களுக்கும் போட்டி கட்டணத்தில் 10 சதவீதம், அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இரு அணித்தலைவர்களுக்கும் அபராதமாக போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதமாகும்.

## விளையாட்டு

## வலிகாமம் கல்வி வலயங்களின் கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

வலிகாமம் வலயங்களுக்கிடைப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் நடை பெற்றது அவற்றின் முடிவு வருமாறு-

15வயது பிரிவு -

முதலாம் இடம் அருணோதயாக் கல்லூரி, 2 ஆம் இடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம் இணுவில் மத்திய கல்லூரி.

17 வயது பிரிவு -

முதலாம் இடம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், 3 ஆம் இடம் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

19 வயது பிரிவு -

1 ஆம் இடம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியர் வித்தியாலயம், 2 ஆம் இடம் மகாஜனாக் கல்லூரி, 3 ஆம் இடம் இணுவில் மத்திய கல்லூரி. (72)

## ஜமேக்காவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில்

# பத்து விக்கெட்டுக்களால் இங்கிலாந்து மேற்கிந்தியத்தீவுகள் அணியை வென்றது!

மேற்கிந்தியத்தீவு - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ஜமேக்காவில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

நான்காம் நாள் ஆட்டமுடிவின்போது, மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்த ஓட்ட எண்ணிக்கையுடன் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 47 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் எவரையும் நிலைத்து நின்று ஆடுவதற்கு இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீவ் ஹார்மிசன் விடவில்லை.

மேற்கிந்தியத் தீவுகள் அணிசார்பில் இரண்டாவது இனிங்சில் ஸ்மித் 12, ஜேக்கப்ஸ் 15, கைல்ஸ் 9 மூவருமே கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற வீரர்களாவர். அவ்வணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்களான சர்வான், அணித்தலைவர் லாரா, சந்திரபோல் உட்பட ஐந்து வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் ஸ்ரீவ் ஹமிர்சன் 12.3 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களையும், ஹோகாட் 2 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் மோசமாக விளையாடிப் பெற்ற 47 ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து அணி 20 ஓட்டங்களால் பின்தங்கி நின்றது. பின்னர் இங்கிலாந்து அணி சார்பில் திறஸ் கோதிக், வோகன் இருவரும் 2.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி தமது வெற்றி இலக்கை அடைந்தனர்.


ஸ்ரீவ் ஹர்மிசன்

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 311 ஓட்டங்களையும் 2 ஆவது இனிங்ஸில் மோசமாக விளையாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களை பெற்றது.

இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 339 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 20 ஓட்டங்களையும் பெற்று வெற்றி பெற்றது.

# இன்றைய போட்டியில் முரளி விளையாடமாட்டார்?

(கொழும்பு)



இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கண்டி - அஸ்கிரிய மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் உடல் உபாதை காரணமாக விளையாடுவது சந்தேகமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இருந்தும், முரளிதரனின் உடல் உபாதை குறிப்பிடும்படியாக பெரிதாக இல்லை என டெஸ்ட் அணித் தலைவர் ஹசான் திலகரட்ன தெரிவித்தார்.

இலங்கை அணியில் சுழல்பந்து வீச்சாளர் குமார் தர்மசேனவிற்குப் பதிலாக ரங்கன ஹேரத் என்ற சுழல்பந்து வீச்சாளர் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் 2000 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளார். அத்துடன் சனத் ஜெயசூரியா, திலான் சமரவீர இருவரில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டால் பதிலாக விளையாட சமன் ஜெயந்த அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவுஸ்ரேலிய அணியிலும் வேகப்பந்து வீச்சாளர் பிரட் வில்லியம்ஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் வருமாறு.

துடுப்பாட்டம் (ஆண்):- 1 ஆம் இடம் மானிப்பாய் பரிஸ் வி.க, 2 ஆம் இடம் சென்.பீற்றர்ஸ் வி.க., எல்லே (ஆண்):- 1 ஆம் இடம் யங்கென்ஜீசியின் வி.க, 2 ஆம் இடம் காந்தி வி.க., வலைப்பந்தாட்டம் 1 ஆம் இடம் கல்வளை வினாயகர் வி.க, 2ஆம் இடம் சென்.மேரிஸ் வி.க., கரப்பந்தாட்டம் (ஆண்) 1 ஆம் இடம் பிரதீப் வி.க, 2ஆம் இடம் முருகானந்தா வி.க., உதைப்பந்தாட்டம் 1ஆம் இடம் யங்கென்ரீசியன் வி.க, 2ஆம் இடம் சென்.வீற்றர்ஸ் வி.க., கபடி ஆண் 1ஆம் இடம் யங்கென்ஜீசியன் வி.க, மெய்வல்லுநர் பெண் 1 ஆம் இடம் பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க (93 புள்ளிகள்), 2 ஆம் இடம் யங்கென்ரீசியன் வி.க (41 புள்ளி), மெய்வல்லுநர் ஆண் 1 ஆம் இடம் மானி.பரிஸ் (52 புள்ளிகள்), 2 ஆம் இடம் யங்கென்ரீசியன் (45 புள்ளிகள்).


அனைத்துப்போட்டிகளின் அடிப்படையில் கழகங்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு -

1 ஆம் இடம் யங்.கென்ரீசியன் 44 புள்ளிகள், 2 ஆம் இடம் மானி.பரிஸ் 20 புள்ளிகள், சென்பீற்றர்ஸ்-10, ஐக்கியம்-10, கல்வளை வினாயகர்-10, பிரதீப்-10, கார்த்திஜி-07, சென் மேரிஸ்-07, முருகானந்தா-07,

சிறந்த தடகள வீரர்கள் விபரம் வருமாறு-

சிறந்த தட வீரன் ட.சாத்வீகன், சிறந்த தட வீராங்கனை எ.அனிற்றாசினி, சிறந்த கள வீரன் பொ.கிருபானந்தன், சிறந்த கள வீராங்கனை நீ.றொசானி, 2004 ஆம் ஆண்டின் சிறநத வீரர் ட.சாத்வீகன்.

# லக்னோ தொகுதியில் வாஜ்பாய் போட்டி!



பிரதமர் வாஜ்பாய், லக்னோ தொகுதியில் 5ஆவது முறையாக போட்டியிடுகிறார். துணை பிரதமர் அத்வானி, மீண்டும் குஜராத் மாநிலம் காந்திநகர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

பாரதீய ஜனதாகட்சியின் முதல் வேட்பாளர் பட்டியல் நேற்று டெல்கியில் வெளியிடப்பட்டது. அதில் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி உட்பட 136 வேட்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

வாஜ்பாய் அத்வானி இருவரும் மீண்டும் முறையே லக்னோ உத்தரப்பிரதேசம், காந்திநகர் (குஜராத்) தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். வாஜ்பாய் லக்னோவில் தொடர்ந்து 5 ஆவது முறையாகவும், அத்வானி காந்தி நகரில் 4 ஆவது முறையாகவும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் எம்.பிக்களாக இருந்த 83 பேருக்கு முதல் பட்டியலில் மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மகன் வருண்காந்தியுடன் சமீபத்தில் பா.ஜனதாவில் சேர்ந்த மேனகாகாந்தி பிலிபட் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருக்கிறார். உத்தரப்பிரதேச முன்னாள் முதல் மந்திரி கல்யாண் சிங், புலந்த் சாகர் தொகுதியில் போட்டியிடுகிறார். முன்னாள் மத்திய மந்திரி வி.சி.சுக்லா தனது கட்சியை நேற்று முன்தினம் தான் பா.ஜனதா கட்சியில் இணைந்தார். அவருக்கு சத்தீஷ்கார் மாநிலம் மகாசாமுந்த் தொகுதி வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய மந்திரிகள் முரளி மனோகர் ஜோஷி (அலகாபாத் தொகுதி), ராம்நாயக் (வடக்கு மும்பை) ஷாநவாஸ் ஹுசேன் (கிஷன்கஞ்ச்), சி.பி.தாகூர் (பட்னா), ராஜீவ் பிரதாப் ரூடி (சாப்ரா) ஆகியோரும் முதல் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். உத்தரப் பிரதேச மாநில பாரதீய ஜனதா தலைவர் வினய் கத்தியார் பைசாபாத் தொகுதிக்கு பதிலாக இந்தமுறை கேரி தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

## காங்கிரஸின் 2 ஆவது வேட்பாளர் பட்டியல் இன்று!

காங்கிரஸின் 100 பேர் அடங்கிய 2 ஆவது வேட்பாளர் பட்டியல் இன்று வெளிவருகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸின் 75 வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய முதல் பட்டியல் ஏற்கனவே வெளி வந்து விட்டது.

வேட்பாளர்களின் தேர்வு குறித்து மாநில பொதுச் செயலாளர்களுடன், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஆலோசனை நடத்திவருகிறார்.

பஞ்சாப், மராட்டியம், ராஜஸ்தான், இமாச்சல பிரதேசம், குஜராத் மாநிலங்களின் வேட்பாளர் தேர்வு முடிந்துவிட்டது.

உத்ராஞ்சல், ஒரிசா, அசாம், திரிபுரா, மேகலாயா, கேரளா மாநில வேட்பாளர்களின் பெயர்களும் விரைவில் வெளியிடப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் கபில் சிபல் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது. மயிலாடுதுறைக்கு மணி சங்கர அய்யரும், நீலகிரிக்கு பிரபுவும் ஏற்கனவே வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டு விட்டனர்.

2 ஆவது பட்டியலில் மேலும் 3 அல்லது 4 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கபில்சிபல் மேலும் நிருபர்களிடம் கூறும்போது, ஹரியானா, தமிழ்நாடு, இமாச்சல பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் எங்கள் கட்சி முழு அளவில் வெற்றி பெறும். அதுபோல், கர்நாடகத்திலும், கேரளாவிலும் காங்கிரஸுக்கு பெரிய அளவில் வெற்றி கிடைக்கும் என்றார்.

யாழ்ப்பாணம்



### புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த 17 மாணவர்கள் கௌரவிப்பு

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சிறப்பு சித்தியடைந்த 17 மாணவ, மாணவிகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவை - வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திசபை நடாத்தியது.

இந்த விழாவின் போது மாணவ, மாணவிகள் வல்வெட்டித்துறை சந்தியிலிருந்து மங்கள வாத்தியங்களுடன் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டு, இங்கு வைத்தியசாலை அபிவிருத்திசபை தலைவர் வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமையிலான கௌரவிப்பு விழா நடைபெற்றது.

### மணலுக்கு விண்ணப்பித்தோர் குடும்ப அட்டையுடன் வரவும்

வடமராட்சி - கிழக்கு நாகர் கோயில் மண்ணைப்பெற விண்ணப்பித்தோர் - குடும்ப அட்டையையும் எடுத்துவரும்படி அந்தப் பகுதி உதவி அரச அதிபர் பணித்துள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் பலர் விண்ணபித்து, மண்ணிற்காக அனுமதியைப் பெற்று, வியாபாரிகளிடம் அந்த இடத்தில் வைத்தே மண்ணை விற்பதால், பொது மக்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (111)

# வாக்களிக்கும் உரிமைகளை நாம் பயன்படுத்த வேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு



தேர்தல் காலங்களில் எமக்கு வாக்களிக்க இருக்கும் உரிமைகளை நாம் உரிய முறையில் பயன்படுத்தி, எமது பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையமும் இணைந்து நடாத்திய - 'தேர்தலும் ஊடகங்களும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இங்கு சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனத்தினால் அச்சிடப்பட்ட தேர்தல் செய்தி எழுதுதல் என்ற கையேட்டினை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைத்து உரையாற்றியபோது - இலங்கையில் நடைபெற்ற தேர்தல் களில் பெரும்பான்மையாக தமிழ் மக்களின் வாக்குகளே நிராகரிக்கப்படுகின்றன. இதற்கு அவர்கள் வாக்களிப்பது தொடர்பாகத் தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்ளாமையே அடிப்படைக் காரணமாகும்.

தமிழ்மக்களுக்கு வாக்களிப்பது தொடர்பாகப் பூரண அறிவு வழங்கப்படவேண்டும். சென்றமுறைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 5.4 வீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

இதைவிட தமக்கு வாக்களிக்கும் உரிமையை மறுத்து, தமக்கு இவ்வாறான செயற்பாடு தேவையற்றதென ஒதுங்கிவருகின்றனர். இந்த விடயம் வருந்தத் தக்கது. நாம் அனைவரும் எமது உரிமைகளையும், கடமைகளையும் செவ்வனே செயற்படுத்த வாக்குகளைத் தகுதியானவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

சென்றவருடம் யாழ்.மாவட்டத்தில் 29 சதவீதமான மக்களே வாக்களித்தனர். வன்னி மாவட்டத்தில் 40 சதவீதமான மக்களே வாக்களித்துள்ளனர். மிகுதி வாக்காளர்கள் வாக்களிக்கத் தவறியுள்ளனர். எமக்கு வாக்களிக்கும் உரிமையுண்டு. அதை நாம் பயன்படுத்த வேண்டும்.

எமது பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றம் அனுப்பவேண்டும் எனப் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டார்.

### அளவெட்டியில் பிரசார கூட்டம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூடடம்- நாளை அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பிரசாரக் கூட்டத்தில் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், தற்கால அரசியல் சூழ்நிலைகளையும் பொதுத் தேர்தலின் முக்கியத்துவத்தையும் விளக்கும் நாடகம் ஒன்று மேடையேற்றப் படவுள்ளது. (94)

### மீள இயங்கும் தொலைபேசி

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான தொலைபேசி இணைப்பு கடந்த ஒரு வருடத்தின் பின்னர் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் இந்தத் தொலைபேசி திருத்தம் செய்யப்பட்டு, அலுவலகத் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. போக்குவரத்து வசதிகள் மோசமாகவுள்ள இந்தப் பிரதேசத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கும், விரைவில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் தொலைபேசிச் சேவை முக்கியமான தென்பது குறிப்பிடத்தக்க தாகும். (113)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினால் நடாத்தப்பட்ட - ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசு பெற்ற மாணவி ஒருவருக்கு - நல்லை ஆதீன முதல்வர் பரிசில் வழங்குவதையும், அருகில் ஆச்சிரம நிர்வாகி மோகனதாஸ் சுவாமிகள் நிற்பதையும் படத்தில் காணலாம். (17)

## சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரியுங்கள்

### விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் பாப்பா

தீவகமக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் - நேற்று முன்தினம் நல்லூர் மங்கையற்கரசி இந்து தமிழ்கலவன் பாடசாலையில் சந்தித்து கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா கருத்துத் தெரிவிக்கையில் -

இரண்டு வருட காலமாக சமாதானம் தொடர்கின்றபோதிலும், எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. மாற்றம் - என்று தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை. எமது தமிழினத்திற்கு எதிரான குழப்பங்கள் தற்போது ஏற்படுத்தப்படுகின்றன.

சிங்களவர்கள்போல, நாமும் வாழ வேண்டும். அதுவும் சிங்களவர் பகுதியில் அல்ல. தமிழ் மக்களுக்குரிய பகுதியில். இதுவே தமிழ் மக்களின் கோரிக்கை.

தமிழத் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான கோரிக்கைகளை முன் வைத்துள்ளது. இவர்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கவேண்டும். தமிழ் மக்களுக்காக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றபோது, அதனை விரும்பாத சில சக்திகள் தடுக்கின்றன. ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை பெறுப்பேற்றதும் இவ்வாறான செயல்கள்தான்.

சர்வதேசம் தமிழீழ தேசியத் தலைவர் நல்ல வழிமுறையில் தமிழ் மககளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பார் என எதிர்பார்க்கின்றது. தற்போது நாம் ஓர் தேர்தலை எதிர் கொள்ளவுள்ளோம்.

முன்னர் நடைபெற்ற தேர்தல்கள் இவ்வாறில்லை. சற்று வித்தியாசமானது. தமிழனத்தின் பெருமையை உலகறிய வைத்தர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். இவர்களுக்கு அடிப்படியாக பொருளாதார பலம் வேண்டும்.

படைகளை எதிர்த்துப் போராடிய மாபெரும் இயக்கம் எமது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம். இவரகளுடன் இணைந்து தமிழர் உரிமைகளை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தலில் போட்டியிடுகின்றது இவர்களுக்கு நாம் ஆதரவு வழங்க வேண்டும். இல்லையேல் நாம் மாபெரும் குற்றமிளைத்தவர்களாக இருப்போம. எமது உரிமைகளை வென்றெடுக்கும் தகுந்த தருணம் இதுவே.



கருணாவின் செயற்பாடு எமக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக தலைவர - கருணாவை சந்திக்க கேட்டபோது அதற்கு அவர் மறுத்துவிட்டார். இதன் வெளியீடாக பிரதேசவாதத்தினை கருணா தூண்டிவிட்டார். ஆனால், அவரின் வழிநடத்தலிலிருந்து தளபதிகள் தலைவரிடம் வந்தார்கள். தொடர்ந்தும் தமது செயற்பாட்டை செய்கின்றார்கள்.

எமது வரலாறு தலைவருக்கு சொந்தமானது. எம்மை சர்வதேச சமூகமே கண்டு வியக்கத்தக்கது. எமது தேசியத் தலைவர் எந்த நெருப்பாற்றையும் நீந்திக்கடக்கும் வல்லமை கொண்ட மாபெரும் தலைவர். உலகமே வியக்கும் அளவிற்கு - ஏப்ரல் 2 ஆம் திகதி பாரிய மாற்றம் ஏற்படலாம். சரியான முடிவை எமது தலைவர் திட்டமிட்டு செயற்படுத்துவார். தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு உங்கள் ஆதரவை வழங்கும் என கருத்து தெரிவித்தார்.

### நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டு

# தூயஅன்னை சாரதாதேவி நான்கு நாள் ரதபவனி

(வடமராட்சி)

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150 ஆவது ஆண்டு விழாவையொட்டி நான்கு நாட்கள் பவனியாக வரவுள்ளார்.

தூய அன்னையின் ரதபவனி நாளை - பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திலிருந்து ஆரம்பமாகி, தம்பசிட்டி வீதிவழியாக வட.இந்து மகளிர் கல்லூரியை அடைந்து, அங்கிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, செல்வச்சந்நிதி, ஆவரங்கால், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தை அடையும்.

மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு இராமநாதன் கல்லூரியை அடைந்து, அங்கிருந்து நல்லை ஆதீனத்தை சென்றடையும்.

அடுத்தநாள் 19 ஆம் திகதி நல்லை ஆதீனத்திலிருந்து புறப்பட்டு, வேம்படி மகளிர் கல்லூரி சென்று, அங்கிருந்து கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயற்சி கல்லூரியை சென்றடையும் 20 ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டு சாவகச்சேரி ஊடாகப் பருத்தித்துறை ஸ்ரீ சேவா ஆச்சிரமத்தை வந்தடையும். (17)

## பொதுமக்கள் கண்டெடுக்கும் அ.அட்டைகளை பொலிஸாரிடம் ஒப்படைத்து உதவுங்கள்

### பொலிஸ் நிலைய அதிகாரி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)


பொதுமக்களால் கண்டெடுக்கப்படும் அடையாள அட்டைகளை எம்மிடம் ஒப்படைத்து உதவுதல் வேண்டுமென யாழ். பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்றவியல் விசாரணைப்பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மாவட்டத்தில் சராசரியாக மாதமொன்றுக்கு முப்பது வரையிலான அடையாள அட்டைகள் தொலைக்கப்பட்டதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுகின்றன.

கடந்த மூன்று வருடங்களில் மட்டும் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் - அடையாள அட்டைகள் தொலைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு பதிவாகியுள்ளன.

இவ்வாறு தொலைக்கப்பட்ட அடையாள அட்டைகள் பல பொது மக்களிடமும், சில பொது நிறுவனங்களிலும் இருப்பதாகவும் தெரிய வருகிறது. அவற்றை உண்மையாக அக்கறையுடையோர் எம்மிடம் ஒப்படைத்தால், முறைப்பாடு செய்தவர்களிடம் வழங்குவதற்கு வசதியாக இருக்கும். இதைவிடுத்து அவர்கள் தொடர்ந்து வைத்திருப்பது, எவருக்கும் உதவாதவகையில் போய்விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் - பிரதம விருந்தினராக வருகைதந்த அ.பஞ்சலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் எஸ்.சண்முககுமார், முன்னை நாள் உப அதிபர் ரி.சொக்கலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (101)

## பல்சுவை அரங்கு

# பிறக்கும் குழந்தை

குழந்தையொன்று - சிலவேளைகளில் இயற்கையான முறையில் பிறக்க முடியாதிருக்கின்றது. இந்தவேளைகளில் வைத்தியர்கள் இருக்கின்றார்கள். **FORCEPS** உதவியுடன் தலையை வெளியேற்ற வேண்டியுள்ளது. கைகளுக்குப் பதிலாக இடுக்கிகளைப் பாவிக்கும்போது, தலைப்பாகத்தில் காய



மேற்படுகிறது. இந்தக் காயங்களினால் மூளையில் பாதிப்பு ஏற்படுமென்றும், குழந்தை வளர்ந்த பின்னரும் பாதிப்புகள் தொடரலாமெனவும் கருதப்பட்டது. ஆனால், அண்மையில் மேற்கொண்ட வைத்திய ஆய்வுகளின்மூலம் அவற்றில் உண்மை இல்லை என தெரிவித்துள்ளது.

குழந்தைகள் துஷ்பிரயோகம் என வைத்தியர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் குழந்தையொன்றின் பிறப்பில் ஏற்படும் காயங்கள் 4 வாரங்களுக்குள் குணமடைந்துவிடுவதாக இங்கிலாந்தில், செபீல்ட் மருத்துவமனை ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

தலையில் பலத்த அடியினால் ஏற்படும் காயங்களும், சிறு குழந்தையை குலுக்குவதால் ஏற்படும் காயங்களும் குழந்தை வளர்ந்த பின்பும் நிலைத திருப்பதாக மேலும் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

# புதிய காலம்




கால நிலையில் தற்போது பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இலை, துளிர் காலத்தில் மலரும் பூக்கள் புதுவருடத்தில் மலர்வதைப் பிரித்தானியாவில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இயற்கை தனது ஒழுங்குமுறையான செயற்பாடுகளில் குழப்பமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதனால், இவ்வகையான மாறுதல்கள் எவ்வாறு நிகழ்கின்றன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்துதல் வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

சில தாவரங்களையும், விலங்குகளையும் அவை வழமையாகக் காணப்படும் காலத்திற்கு முன்னரே காணக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால், தேனீக்களை அவற்றின் வழமையான காலத்திற்கு முன்னரே காணக்கூடியதாகவுள்ளதாகவும், 25 ஆண்டுகளுக்கு முன் அவை காணப்பட்ட காலத்திற்கு இருவாரங்களுக்கு முன்னரே தற்போது காண முடிகின்றது.

# பாவம் பறவைகள்

பறவைகள் அழகுக்கு மட்டுமல்ல, இயற்கையைச் சிறப்பாக மாற்றுவதற்கும் உதவி புரிகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அத்துடன் தொடர்ச்சியாக ஐக்கியஇராச்சியத்தில் தோன்றிவரும் கைத்தொழில் புரட்சி காரணமாக இயற்கை அம்சங்கள் பலவும் அழிக்கப்பட்டுக் கொண்டுவருகின்றன. இதன் காரணமாக இயற்கை வளங்களும் அழிவுக்குள்ளாகின்றது.




பறவைகளே இதன் காரணமாக அதிகம் பாதிக்கப்படுவதாகக் கருதப்படுகின்றது. கிடைத்தற்கரிய 400 பறவை இனங்களின் நிலைமை கவலைக்குரியதாக ஐக்கியராச்சியத்தின் உயர் குடிமக்கள் கூறுகின்றார்கள். பெரும்பாலும் 2004 ஆம் ஆண்டளவில் பெரும்பாலான பறவைகள் அழியும் என்ற எச்சரிக்கை ஒலி



எழுப்பப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பறவை இனங்கள் அழிவதனைத் தொடக்கிய நாடு ஐக்கியஇராச்சியம் என்றாலும், தற்போது அதனைப் பின்பற் றும் நாடுகளாக ஜப்பான், மேற்காபிரிக்கா ஆகியன காணப்படுகின்றன. பசுபிக் தீவுகளில் காணப்படக் கூடிய பறவை இனங்களின் முட்டைகள் சட்டவிரோதமாகக் களவாடப்படுகின்றன. மேற்காபிரிக்க நாடுகளில் முட்டைசேகரிப்பு 5 ஆண்டுகளுக்குத் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் பறவை இனங்கள் பெருக வழி வகுக்கப்பட்டுள்ளது.

# வேண்டாம் காஸ்

நுரைக்கும் பானங்களை அருந்துவது இளைஞர்களிடையே பல் வியாதிகளை உருவாக்குவதற்குக் காரணமென பிரித்தானியாவின் பல் தொடர்பான சஞ்சிகை தெரிவித்துள்ளது.



பல்லில் அரிப்பு ஏற்படுவதற்கும், நுரைக்கும் குளிர்பானங்களுக்குமிடையேயும் தொடர்பு இருப்பதாக மேலும் தெரிவித்துள்ளது. உடற்பருமனைக் குறைத்துக் கொள்வதற்கு உட்கொள்ளும் சீனியின் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இதனால், சிலர் நுரைக்கும் மென்பானங்களை நாடுகின்றனர். ஆனால், இந்தப் பானங்களில் அதிகளவு அமிலத்தன்மை காணப்படுகிறது. பல்லின் மேற்பகுதியில் காணப்படும் மிளிரியினை அமிலங்கள் சிதைவடையச் செய்கின்றன.


சிதை வடைந்த பற்களில் நோய்க் கிருமிகள் இலகுவில் சென்றடைகின்றன.

ஆனால் உணவுப்பழக்கங்களும் பல்வியாதிகளை உருவாக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புளோரைட் கொண்ட பற்பசைகள் நோய்க்கிருமிகளை அழித்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இசை மருந்து



விஞ்ஞானிகளின் கருத்துப்படி இசை மனிதனுடைய எண்ணக்கருத்துக்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கக் கூடியது. அவர்களுக்கு இசையானது ஒரு ஓய்வினையும் அதே நேரத்தில் பரபரப்பான சூழலையும் உருவாக்கும். ஆனால், ஆராய்ச்சியாளர்கள் பலவிதமான இசை மூலம் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் படி ஒவ்வொருவகையான இசையும் மனிதனை ஒவ்வொரு வகைமாற்றம் (உளரீதியான) உண்டுபண்ணுகிறது. இங்கே செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் எல்லாம் தலையில் போடப்பட்ட கெட்போன் ஒலிமூலமே செய்யப்பட்டுள்ளது. சிலர் பாட்டுக்கேட்டுக்கொண்டு கணித சம்பந்தமான வேலைகளில் ஈடுபடுகின்றார்கள்.




இது அவர்களுக்கு ஒருவகையான ஊக்கத்தைக் கொடுப்பதாக அறியப்பட்டுள்ளது. ஒரு பரபரப்பான சூழல் காணப்படும்போது, அந்தச் சூழலை மாற்றக்கூடிய வல்லமை இசைக்கு மட்டுமே உள்ளது. தற்போது இசையை ஐரோப்பிய நாட்டு வைத்தியசாலைகளில் உளநோய்களுக்கான மருந்தாக உளவியல் நிபுணர்கள் பாவிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இசையினை ரசிக்காத உயிரினங்கள் மிகவும் அரிதாக உளவியல்ரீதியில் காணப்படுகின்றன. அண்மையில் டப்ளின் நகரத்தில் உருவாக்கப்பட்ட ஒரு மீடியா ஆய்வுகூடத்தில் - இசை பற்றி மேலும் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் காது மற்றும் தலை எவ்வாறு இசையில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பது ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகெஸ்ட்ரா கருவிகள் எல்லாமே உளவியல்ரீதியான மருந்துகள் என்பதும் ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

# ஆழமான பார்வை

ஹபிள் தெலைநோக்கிகள் பிரத்தியேகமாக விண்வெளி ஆராய்ச்சி செய்வதற்கே உருவாக்கப்பட்டவை. அவற்றினுடைய ஊடுருவும் தன்மை பெரும்பாலும் அல்ரா வயலட் கதிர்களின் செல்வாக்குத் தொலைதூரத்தில் இருக்கின்ற பால்வீதிகளைத் துல்லியமாகக் காணக்கூடியதாகவுள்ளது. இதில் காணப்படுகின்ற இன்னுமொரு அற்புதம் என்னவென்றால் இவை இளம் பால்வீதிகளையும் பார்க்கக்கூடிய சிறப்பான துல்லியத்தினைக் கொண்டது. இந்தத் தொலைநோக்கிமூலம் ஏறக்குறைய 10 ஆயிரம் வால்வெள்ளிகளைக் காணக் கூடியதாக இருக்கும் என்பது விண்வெளி தொலைநோக்கி விஞ்ஞான அமைப்பின் பணிப்பாளரின் கருத்து. இதே ஹபிள் தொலைநோக்கியால் 1995 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் பார்த்து எடுக்கப்பட்ட படங்களிலும் பார்க்க தற்போதைய பார்வைப்புலம் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றது. அத்துடன், துல்லியமாகவும் காணப்படுகின்றது.



சில நட்சத்திரக் கூட்டங்கள் பெரும்பாலும் மறைந்து காணப்படுகின்றன. இவற்றினைப் பார்க்கக்கூடிய சக்தி, இந்தவகைத் தொலைக்காட்டிகளுக்கு மட்டுமே உண்டு என்பது விஞ்ஞானிகளின் கருத்தாக இருக்கின்றது.

அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, இந்தத் தொலைநோக்கியில் காணப்படுகின்ற 'கமரா' - ஆயிரம் பொருட்களை ஒன்று சேர்த்து படமெடுக்கும் வல்லமை கொண்டதாகக் காணப்படுகிறது.

இது மிகவும் ஆழமான கண்டுபிடிப்புத்தான்.

# திரை விமர்சனம்

## அடிதடி

முதல் தடவையாகச் சத்தியராஜின் நிஜவயது, தோற்றம் ஆகிய வற்றினை வைத்து அவருக்கு ஒரு பாத்திரத்தைக் கொடுத்து, இந்தப் படத்தின்மூலம் அறிமுகமாகியிருக்கிறார் டைரக்டர் சிவராஜ். பெண்வாச னையே இல்லாமல் குடி, அடிதடி, ரகளை என்று 50 வயதைக் கழித்துவிட்டவர் சத்தியராஜ்.





பெண் துணையின் உயர்வை மிஸ் சென்னை போட்டியின் போது, அழகாக எடுத்துச் சொல்கின்றார் கல்லூரி மாணவி ரதி. இதிலிருந்து ரதியையே இவர் காதலிக்கத் தொடங்கி விடுகின்றார்.


இதற்காக ரதியை வற்புறுத் தத் தொடங்கவும் செய்கின்றார். சத்தியராஜின் காதலுக்கு அவ ரின் அடியாட்கள் துலுக்கானம், ராஜ்கபூர் போன்றவர்கள் நகைச்சுவையான ஐடியாக்க ளைக் கொடுகின்றார்கள். பம் பாய் தப்பிச் செல்லமுயலும் ரதி குடும்பத்தவர்களை, வெகு எளிதாக நெப்போலியன் திருப் பியழைத்துவருவது அப்பட்ட மான சினிமாத்தனம். கல்லூரிக்கே சென்று நெப்போலியன் ரதியை துப்பாக்கியைக் காட்டி மிரட்டுவது மிகவும் கடுமை. ரதியின் காதலனாக அப்பாஸ் தலையைக் காட்டிவிட்டுப் போகின்றார். சுகன்யா, டி.பி.கஜேந்திரன், வையாபுரி ஆகியோரும் நடித்திருக்கின்றார்கள். தேவா இசையமைத்திருக்கின்றார்.

அப்படியே மன்மதராசா பாடலை உம்மா என்ற பாடலாகக் காப்பியடித்திருக்கிறார். என்ன தேவாசார். மியூசிக்குக்கு பஞ்சமா? மொத்தத்தில் சத்யராஜ் நடிக்கவில்லை வந்து போய்விட்டிருக்கிறார். சண்டைக் காட்சிகள் ஜொலிக்காத அடிதடி.

- PNS -

# கணினி மூலகங்கள்

கணினிகள் எவ்வளவுக்கெவ்வளவு பயனுள் ளதாகவுள்ளதோ அவ்வளவு உபத்திரவத்தினை யும் கொடுக்கக்கூடியது.




பொதுவாகக் கணினிகள் சூழல் மாற்றங்க ளைத் தாங்கமாட்டாதவை. இலகுவில் பழுதடை யக்கூடியவை. இவற்றில் முக்கியமாக செயற் பாட்டு கணினி அமைப்பு, (CPU) அதிர்ச்சி மற்றும் வெப்பநிலைமாற்றங்களை உடனடியாக உணர்ந்து செயலிழந் துவிடுகின்றது. அத்துடன் முழுமை யான கணினியமைப்பு பல்வேறான இரசாயனப் பொருட்களின் கலவைத் தொகுப்பாகவே காணப்படுகின்றது.

நாகம், திரையில் காணப்படுகின்றது. ஆர்சனிக் கதோட்டுக்குழாயில் காணப்படுகின்றது.




அந்திமனிக் மூவொட்சைட்டு (CPU) காணப்படுகின்றது. கட்டுப்படுத்தி (Mouse) இல் பொலி புறோமின்றற் என்ற மூலகம் காணப்படுகின்றது. செலனியம் கீ போட்டில் காணப் படுகின்றது. கட்மியம் CPU இல் காணப்படுகின்றது. குறோமியம் கோபால்ட்டு, மேக்கூறி ஆகியன வும் CPU இல் காணப்படுகின் றன. இதன் காரணமாகத்தான் மூலகங்கள் இலகுவில் தாக்கம் புரிந்து அந்தந்தப் பாகங்களைப் பழுதடையச்செய்கின்றன.

இதன் காரணமாகத்தான் இலகுவில் தாக்கம் புரியாத மூலகங்கள் மூலம் கணினியின் பாகங்கள் தற்போது ஆக்கப்படுகின்றன. அத்துடன் கணினிகள் பாவனைக்குதவாதது என்று கழிக்கப்படும்போது, அந்தக்கழிவுப் பொருட்களும் சூழலுக்குதவாதனதானாம். அவையும் வளிமண்டலத்துடன் தாக்கம் புரியுமாம்.

# அச்சுறுத்தும் ரயில் பாதை

ஐரோப்பிய நாடுகளிடையே ஆரம்பிக்கப்படவுள்ள நீண்ட ரயில் பாதை உலகில் அழிந்து வரும் 20 பறவை இனங்கள் வாழும் காடுகளூடாக அமைக்கப்படவுள்ளன. இப்பாதை அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டதும் அத்திட்டம் அழிந்து வரும் பறவை இனங்களுக்கு மேலும் எவ் வகையான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும் என்பது இதுவரை ஆராயப்பட வில்லை. மேலும் இத்தாலிக்கும், சிசிலிக்கும் இடையே அமைக்கப்பட வுள்ள பாலம் இடப்பெயர்வினை மேற் கொள்ளும் பறவைகளுக்கு அச்சுறுத் தலாக அமைந்துள்ளன. இதனி டையே, ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் திட்டத்தில் 20,000 கிலோமீற்றர் பெருந் தெருவும், 30,000 கிலோ மீற்றர் ரயில் பாதையும் அமைக்கப் படவுள்ளது.







மேலும், ஜேர்மன் நாட்டில் ஆரம்பித்து ரோமேனியா வரையான குளிர்வலயப் பிரதேசத் தையும், பல அரிய உயிரினங்கள் வாழும் காடுகளும் பாதிப்புக் குள்ளாக்கப்படலாம்.

# திருட்டு ஓடியோ சிடிகள்

திருட்டு விசிடிகள் உலகளாவிய ரீதியில் பெரும்பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. இதனைத் தடுப்பதற்கு கடுஞ்சட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. அத்துடன், தண்டனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது திருட்டு ஓடியோ சிடிகளும் இதேபோன்று தடைகளுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் போடப்பட்டு இருக்கின்றது இந்தத் தடையுத்தரவு.

இந்த உத்தரவின் மூலம் வீடுக ளுக்குள் புகுந்து தேடுதல் பண்ணவும் உரிமை இருக்கின்றது. இதன் மூலம் உலகத்தின் பிரபலமான மியூசிக்கம் பனிகளுக்கு மிகுந்த சந்தோஷம். இந்தச் சட்டம் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தற்போது அறி முகப்படுத்தப்பட்டாலும், மற்றைய நாடுகளுக்கும் விரைவில் வரும் என்கி றார் அமெரிக்காவின் பிரபல டிஜிட்டல் மியூசிக் நிறுவனத்தின் பணிப்பாளர். ஆனால், இப்படியான தடைகள் MP3 போன்ற நிறையப்பாடல்களைப் பதிவு செய்யும் முறைகளில் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்று கூறப்படுகிறது. ஏனெனில் MP3 என்பது பல படங்களின் பாடல் தொகுப் பாகும். இது தனித்தனி சிடிக்களிலும் பார்க்க மலிவானதும் கூடுதலான பாடல்களைக் கொண்ட தாகும்.





ஆனால், திருட்டு விசிடிகளில் பாடல் கேட்பது திருட்டு மாங்காய் சாப்பிடுவது போலத்தான்.

# செய்மதி வானொலி

சாதாரண வானொலியைக் கேட்டுப் பழக்கப்பட்ட அமெரிக்க நாட்டு மக்கள் தற்போது செய்மதி வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்குத் தயாராகி விட்டார்கள். பழைய இலத்திரனியல் வானொலிப் பெட்டிகள் எல்லாம் குப்பைக் குள் போடுவதற்குத் தயாராகிவிட்டன. 24 மணிநேரமும் வானொலிக்கட்டுப்பாட்டு அறை மிகவும் பரபரப்புடன் இருக்கவேண்டிய கட்டாயம் இருக்கின்றது. ஏனெனில், செய்மதிகள் மூலம் கிடைக்கும் தகவல்கள் இணையவலைப்பின்னல் மூலம் அனுப்பப்பட்டுக் கொண்டே இருக்கும். குறிப்பாக ஒலிகள் காற்றலைகள் மூலம் பயணம் செய்து டிஜிட்டல் ஒலியமைப்பு ஏற்படுத்தப்பட்டு ஏறக்குறைய 100 சனல்கள் கிடைக்கும் என் பது சிரியஸ் செய்மதி வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாள ரின் நம்பிக்கை. 2001 ஆம் ஆண்டு கார்கள் மற்றும் வாகனங்களில் செய்மதி வானொலிகள் முதன்முறை யாகப் பொருத்தப்பட்டன. அப்பொழுதே வீட்டுக்கு வீடு செய்மதி வானொலிப்பெட் டிகள் வரவில்லையே என்ற ஆதங்கம் இருந்தது.



அது இப்போது நிறை வேற்றப்பட இருக்கிறது. ஏறக்குறைய 25 மில்லியன் மக்கள் இதனைப் பயன்படுத்துவார்கள் என்றும் மாதத்திற்கு அவர்கள் 9.99 அல்லது 12.95 அமெரிக்க டொலர்களைச் செலுத்தவேண்டிவரும் எனவும் கூறப்படுகின்றது. இதற்கிடையே, அடுத்து செய்மதிமூலம் தொடர்ச்சியான வீடியோ ஒலிபரப்பு சேவையினைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். இதுதான் உலகம்.

# ரொசெட்டா விண்கலம்

ஐரோப்பிய விஞ்ஞானிகளால் 67 பி எனப்படும் வால்நட்சத்திரத்தை 2014 இல் தரையிறங்குவதற்கென அனுப்பப்பட்ட விண்கலம் "ரொசெட்டா" தனது நீண்ட பிரயாணத்தில் ஸ்ரெயின், லுட்ரேரியா எனப்படும் இரு எரிகற்களை (ASTERIODS) கடந்து செல்லவுள்ளது. செப்டம்பர் 2008 இல் ஸ்ரெயின் என்ற எரிகல்லையும், 2010 இல் லுட்ரேரியா என்ற எரிகல்லையும் ஆராயவுள்ளது. 'ரொசெட்டா' விண்கலம் தனது 10 ஆண்டுகால பிரயாணத் தில் இவ்விரு எரிகற்களையும் கடந்து செல் லவுள்ளது. இவ் எரிகற்கள் செவ்வாய்க் கிரகத்திற்கும், 'யுப்பிட்டர்' கிரகத்திற்கும் இடையே காணப்படுகிறது. எரிகற்களுக்கு வரையறுக்கப்பட்ட உருவம் கிடையாது. இவ் விரு எரிகற்களும் விஞ்ஞானிகளின் கவனத்தை அதிகம் கவர்ந்துள்ளன.



இவ்விரு எரிகற்களையும் கடந்து செல்லும் போது, கலத்தின் வேகம் முறையே செக்க னுக்கு 7 கிலோமீற்றர், 15 கிலோமீற்றர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 'ரொசெட்டா' கலத்தில் பொருத்தப்பட்ட கமராக்கள் இந்த எரிகற்களின் திணிவு, அடர்த்தி, வெப்பநிலை ஆகிய வற்றைக் கணிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் அவை எவ்வாறு உருவாக்கப் பட்டன என்பதை விஞ்ஞானிகள் அறிந்துகொள்ள முடியும். இதே நேரத்தில் 'ரொசெட்டா' கலத்துடன் இணைக்கப்பட்ட 'பிலாயி' என்ற துணைக்கலம் தனது தாய்க்கலத்திலிருந்து பிரிந்து சென்று வால்வெள்ளியில் இறங்கவுள்ளது. வால்நட்சத்திரம் எரிகற்களும், பூமியினதும் மற்றக் கோள்களினதும் கட்டமைப்பிற்கு ஒத்தவையாக அமைந்துள்ளன. இதனால், சூரியக் குடும்பத்தில் (SOLAR SYSTEM) ஆரம்பத்தை அறியமுடியுமென இத்திட்டத்தின் தலைவரான பேராசிரியர் டேவிட் அவுத்வூட் தெரிவித்துள்ளார்.

கிழக்கு நெருக்கடி தொடர்பாக....

அப்பாவி

# கருணாவின் செயற்பாடுகள்; சில கருத்து விளக்கங்கள்...!

தற்போது கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் மட்டு-அம்பாறை முன்னாள் தளபதி கருணா வெளியிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் போன்றோர், தினசரி தொடர்பூடகங்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர்.

இதுபோலவே கருணாவின் கருத



துக்களும், குற்றச்சாட்டுக்களும் தினசரி வெளியாகின்றன. தொடர்ச்சியாகக் கருணா வெளியிடும் தகவல்களைக் கூர்ந்து கவனித்தால், பல்வேறு உண்மைகள் வெளிவரும். இதற்குள் முக்கியமானது தனது ஆயுதபலம் தொடர்பாக கருணா வெளிட்ட நீண்டபட்டியல். இதற்குள் விமான எதிர்ப்பு ஆயுதங்களும், பல்குழல் பீரங்கிகளும் அடங்குகின்றன.

மட்டு-அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற எந்தத் தாக்குதலிலாவது இந்தவகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக இதுவரை செய்திகள் வெளியாகவில்லை. அதற்கான வாய்ப்புகளும் இல்லை. புழுகுனாவ முகாம் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆட்லறியும், பல்குழல் கொண்டதல்ல. அவ்வாறாயின், மட்டு - அம்பாறையில் இராணுவ, அரசியல் விடயங்களைத் தனித்தே கையாளும் அனுமதியைக் கொணட கருணாவை நம்பி, தேசியத் தலைவரால் கையளிக்கப்பட்டவையே இவை என்பது புலனாகும்.

இவற்றின் பணப் பெறுமதி ஒருபுறமிருக்க, இவற்றைக் கொண்டு போய்ச் சேர்க்கும் முயற்சியில் தம்மைக் கடலில் கரைத்த அந்த மாவீரர்களின் தியாகத்தை அர்த்தமற்றதாக மாற்ற முனைந்துள்ளார் கருணா. இதிலிருந்து இவரின் துரோகத்தனத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அரசுடனான பேச்சு வார்த்தைகளில் தமது அரசியற் பலத்தின் அடையாளமாக சு.ப.தமிழ்ச்செல்வனையும், இராணுவ பலத்தின் அடையாளமாகக் கருணாவையும் வெளிப்படுத்தினார் தேசியத் தலைவர். அவ்வாறான ஒரு உயர்ந்த நிலையை அடைந்த பின்பும் தாம் ஒதுக்கப்பட்டதாகக் கூறும் கருணாவின் குற்றச்சாட்டு எவ்வகையில் ஏற்புடையதாகும்?

இன்று மிகவும் குறுகிய பிரதேசவாதத்தினுள் மட்டு - அம்பாறை மாவட்ட மக்களை மூழ்கவைக்க முயன்றுள்ளார் கருணா. உண்மையில், இலங்கைத் தமிழரின் வரலாற்றை அவர் சரியாகப் புரிந்து கொள்ளாததின் விளைவே இதுவாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை நேருவின் பின் அவரது மகள் இந்திராகாந்தி, பின் இந்திராவின் மகன் ராஜீவ் காந்தி. தற்போது இவரின் பிள்ளைகளான ராகுல், பிரியங்கா என ஒரு பரம்பரையில் பிறந்த தகுதியே ஆட்சிக்கு வரப்போதுமானதாகிவிடும். ஆனால், இலங்கைத் தமிழர்களின் வரலாற்றைப் பார்த்தால், அதிலிருந்து முற்றிலும் மாறுபாடானதாகும்.

இலங்கைத் தமிழர்கள் முதலில் ஒரு பிரபுத்துவத் தலைமையான சேர். பொன். இராமநாதனை ஏற்றார்கள். அடுத்த தலைமை அவர்களது சந்ததியல்ல. ஜீ.ஜீ.பொன்னம்பலமே ஜீ.ஜீக்குப்பின் அவரது மகனை. ஏற்றுக் கொள்ளவில்லை. மலேசியாவில் பிறந்த கிறிஸதவரான செல்வநாயகத்தை ஏற்றுக்கொண்டார்கள். செல்வநாயகத்தின் பின் அவரது மகன் சந்திரகாசனை ஏற்றுக்கொள்ளவில்லை. அமிர்தலிங்கத்தை ஏற்றுக் கொண்டார்கள், அமிர்தலிங்கத்தின் பின்னர் ஆயுதம் ஏந்தியதாகக் கூறிக் கொண்ட அவரது மகன் காண்டீபனையோ, ஆயுதப் போராட்ட இயக்கமொன்றின் தலைவராக இருந்த பகீரதனையோ ஏற்றுக்கொள்ளவில்லை. பிரபாகரனையே ஏற்றுக் கொண்டார்கள். (தேசியத் தலைவர் நீண்ட காலம் வாழ்ந்து தமிழினத்தை வழி நடதத வேண்டும்)

இதன் தொடர்ச்சியாகப் பரம்பரையைப் பார்க்காமல் அந்தந்தக் காலகட்டத்தில் தமக்குச் சரியான தலைமை என்ற வகையில், அவர்களின் தெரிவில் கருணாவும் இடம் பெற்றிருக்கலாம். ஏனெனில், ஒருவரின் பிறந்த இடம் குறித்தோ, பரம்பரை குறித்தோ தலைமையை இலங்கைத் தமிழர்கள் தீர்மானிப்பதில்லை. மலேசியாவில் பிறந்த ஒரு கிறிஸ்தவரையே (தந்தை செல்வா) தமது தலைவராக ஏற்றுக் கொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு ஜெயசிக்குறு போன்ற சமர்களில் தன்னை இனங்காட்டிய கருணாவை ஏற்றுக் கொள்வதில் என்ன தயக்கம் இருந்திருக்கும்?

இன்று ஏற்பட்டுள்ள இந்த நிலைமை குறித்து, அனைத்துத் தமிழினமுமே இரத்தக் கண்ணீர் வடிக்கிறது. நம்பிக்கைத்துரோகம் குறித்து வெதும்புகிறது. எனினும், தீமையில் நன்மையாக ஒரு விடயம் நடந்தேறியுள்ளது.

அதாவது, தேசியத் தலைவரின் காலத்திலேயே கருணா தன்னை இனங்காட்டியுள்ளார். அந்தவகையில் நன்மைதான். இன்னுமொரு ஆயிரம் ஆண்டுகளில் தமிழருக்கு இவ்வாறான தலைமை கிடைக்குமா? என்றெண்ணித் தமிழினம் பெருமைப் படும் தலைவர் - இந்தப் பிரச்சினையை எப்படியும் வெற்றிகரமாகக் கையாளுவார் என்பது அனைவரினதும் நம்பிக்கை.

தேசியத் தலைவரின் காலத்தின் பின் இவவாறான துரோகம் செய்ததாகப் பெரும்பாலானோர் ஏற்றிருக்க மாட்டார்கள். தலைமைத்துவப் போட்டி காரணமாகவே இவ்வாறு குற்றஞ்சுமத்தப்படுவதாகக் கருதுவர். அந்தவகையில் தனது சுயரூபத்தைக் கருணா வெளிப்படுத்தியிருப்பது ஒருவகையில் நன்மையே.

யாழ், வன்னி மற்றும் ஜெயசிக்குறுச் சமர்களில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மட்டு- அம்பாறை வீரர்கள் மாவீரர்களாகியிருப்பதைக் கருணா சுட்டிக்காட்டுகிறார். இந்தச் சமர்களில் அவர்களின் பங்கு உயரியதுதான். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. எனினும், இந்தச் சமர்களில் ஏனைய மாவட்டப் போராளிகளும் மாவீரர்களாயுள்ளனர் என்பதையும் மறுத்துவிடமுடியாது. குறிப்பாக மாலதி படையினரின் மன்னகுளம் சமரைக் குறிப்பிடலாம்.

இதேவேளை, குறிப்பாக ஜெயசிக்குறு சமருக்கு முன்னதாக மட்டகளப்பு மாவட்டம் மற்றும் திருமலை மாவட்டத்தின் மூதூர்ப் பகுதிகளின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதையும் நோக்கவேண்டும். ஜெயசிக்குறு சமரில் ஏறத்தாழ இராணுவ படைப்பலமும், புலிகளின் படைபலமும் முற்றாகக் களத்தில நின்றதாகவே கொள்ளலாம்.

ஜெயசிக்குறு சமரில் ஈடுபடுவதற்காகவே மட்டக்களப்பில் பெரும் படைவிலகல் நடைபெற்றது. அவ்வாறே மூதூரிலும் நடைபெற்றது. இவ்வாறாகக் கிடைத்த பெரும் நிலப்பரப்பே தறபோது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது ஜெயசிக்குறுவின் விளைவே இது. ஜெயசிக்குறுவின் வெற்றிக்குத் தேசியத் தலைமையின் வழிகாட்டலும், வழங்கலும் இருந்தது. அதேவேளை, இதேயளவு வீரர்களை இழந்திருந்தாலும் இந்தளவு கட்டுப்பாட்டுப் பகுதியை மட்டக்களப்பில் ஏற்படுத்தியிருக்க முடியுமா என்பது கேள்விக்குரியது.

ஏனெனில், மட்டக்களப்பின் புவியியல் அமைவிடம் - வயற்பரப்பையும், சிறு கிராமங்களையும் கொண்டதாக உள்ளன எனலாம். மட்டு - அம்பாறை போராளிகளுக்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்திய கருணா - பி.பி.சி. பேட்டியில், தான் மீண்டும் இயக்கத்தில் பணியாற்றுவதாக இருந்தால் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், நிதித்துறைப் பொறுபபாளர் தமிழேந்தி, காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகிய மூவரையும் பதவியிலிருந்து விலக்கவேண்டு மெனக் கோரியுள்ளார். மட்டு- அம்பாறை மக்களின் உரிமைக்கும், இவர்களைப் பதவி விலக்கக் கோருவதற்கும் என்ன சம்பந்தம்? குறிப்பிட்ட துறைப் பொறுப்பாளர்களில் 50 வீதமோ 75 வீதமோ கோரியிருந்தால் அதை எல்லோரும் ஏற்றிருபபார்கள். மூவரையும் விலக்கக் கோருவதிலிருந்தே கருணாவின் சுயரூபத்தைப் புரிந்துகொள்ளலாம்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்ற அவரது கருத்தின்மூலம் கருணா தன்னைக் குட்டி ஆனந்த சங்கரியாகவும் இனங்காட்டியுள்ளதுடன், வட தமிழீழ மக்கள் - வன்னித் தலைமையை நிராகரிக்கும் போது, தமிழ்த்தேசியவாதம் பாதுகாக்கப்படும் என்றும், அங்கேயும் 80 சதவீத மக்கள் அதனை எதிர்க்கிறார்கள் என்றும் கூறி, தான் எந்த சக்தியின் பின்புலம் பலத்தில் நின்று உளறுகிறார் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக தற்போதைய குழப்பம் என்ற அம்பு எங்கிருந்து ஏவப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது.

இறுதியாக ஒரு விடயத்தை அனைவரும் விளங்கிக்கொள்ளவேண்டும். ஒன்று என்ற இலக்கத்தின் பின்னே நின்றால்தான் சைபர் என்ற இலக்கத்துக்குப் பெறுமதி கிடைக்கும். இந்த ஒன்றுக்குப் பெருமை கிடைகக நாம் தானே காரணம் என எண்ணி, சைபர் ஒன்றுக்கு முன்னால் போனால், எந்தக் காலத்திலும் அதற்குப் பெறுமதி கிடையாது. இதில் அந்த ஒன்று யார் என்பது எமக்குத் தெரியும். அந்த ஒரே தலைமையை நம்பிக்கையுடன் பின்தொடர்வோம். ◆

அறிவியல்

எஸ். ஜெயா

# பரம்பரை அலகுகள் வகைப்பாட்டில் உயர் தொழில் நுட்பவியலின் அண்மைக்கால முன்னேற்றங்கள்

ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களிடையே உருவ ஒற்றுமை காணப்படுவது ஏன் என்று எண்ணியிருக்கிறீர்களா? அல்லது ஒரு குழந்தைக்கு எப்படி? அப்பாவைப்போல மூக்கும், அம்மாவைப்போல கண்களும் ஆனால் அப்பாவினதோ, அம்மாவினதோ இல்லாமல், பாட்டியினது குருதிப்பிரிவும் எப்படி வந்தது எனச் சிந்தித்து இருக்கின்றீர்களா?

நீலநிற கண்களும், செம்படைத் தலைமுடியும் கொண்ட பெண்ணிற்கும், கறுப்புநிறத் தலைமுடியும், கண்களும் கொண்ட ஆணிற்கும் பிறக்கின்ற குழந்தைகளுக்கு கண்களும், தலைமுடியும் என்ன நிறத்திலிருக்கும் என்று கற்பனை செய்து பார்திருக்கின்றீர்களா?

இப்படிப்பட்ட தோற்றப்பாட்டினை எமது புலம்பெயர் தமிழ் குடும்பங்களின் கலப்பு உறவுகளால் ஏற்பட்ட வழித்தோன்றல்களை நேரில் நீங்கள் பார்க்கும் அனுபவங்களை அதிகம் இன்றைய சூழலில் பெற்றிருப்பீர்கள்.

இத்தகைய இயல்புகளின் ஊடு கடத்தலுக்கு யாது காரணம் என்று மூளையைப்போட்டு குழப்பியதுண்டா?

அவ்வாறாயின், நாம் இதற்கான அடிப்படை வலைப்பின்னல்களைப் பார்ப்போம். ஒரு சந்ததியிலிருந்து இன்னொரு சந்ததிக்கு, உருவ இயல்புகளும், வேறு சில இயல்புகளும் ஜீன்ஸ் **(Genes)** எனப்படும் பரம்பரை அலகுகள்மூலமாக ஊடு கடத்தப்படகின்றன.

மனித உடலிலுள்ள கருக் கொண்ட காலங்களில் - 23 சோடி குரோமசோம்ஸ் **(Chromosomes)** என்று சொல்லப்படும் நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 22 சோடி உடல் இயல்புகளை நிர்ணயிக்கும் ஆட்டோசோமல் **(Autosomal)** நிறமூர்த்தங்களும், ஒரு சோடி இலிங்கத்தை நிர்ணயிக்கும் பால் **(Sex)** நிறமூர்த்தங்களுமாகும்.

இவற்றில் 23 நிறமூர்த்தங்கள் தந்தையிடமிருந்தும், 23 நிறமூர்த்தங்கள் தாயிடமிருந்தும் வருகின்றன.

அடுத்த நூற்றாண்டு - உயர் தொழில் நுட்பவியலை **(Bio technology)** முன்னோடியாக கொண்ட நூற்றாண்டாக எதிர்பார்க்கப்படுகின்றது.

1953 ஆம் ஆண்டில் அமெரிக்க உயிரின இரசாயனவியலாளர் ஜேம்ஸ் வாட்சன் **(James Watson)** பிரித்தானிய உயிர் பௌதீக வியலாளர், பிரான்சிஸ் கிரிக்கும்( **Francis crick) DNA** இன் இரட்டைச் சுளி வடிவமைப்பை கண்டறிந்தே இதற்கு வித்திட்டது.

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய சாதனையாக அமையப்போவது, 80000 - 100000 வரையிலிருக்கும் மனிதப் பரம்பரை அலகுகள் அனைததினது தொழிலையும், பங்களிப்பையும் கண்டறிந்து வரைபடமாக்கும் **H.G.P (Human Genome Project)** ஆகும்.

மனிதப் பரம்பரை அலகுகளை வகைப்படுத்தும் பணி 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ், அவுஸ்ரேலியா உட்பட 18 இற்கும் மேலான நாடுகள் இப்பணியிலே பங்குபற்றுகின்றன.

ஆரம்பத்தில் இப்பணி, அரசாங்க ஆய்வு கூட்டங்களிலேயே நாடாத்தப்பட்டது. இந்த ஆய்வுகூடங் கள் - 2005 ஆம் ஆண்டளவில், மனிதப் பரம்பரை அலகுகள் அனைத்தையும் வகைப்படுத்தி வெளியிடுவோமென அறிவித்தன.

பரம்பரை அலகுகள் அனைத்தினது தொழிலையும் கண்டறிதல், அவற்றால் கடத்தப்படும் அல்லது அவற்றின் விவகாரத்தால் ஏற்படும் பரம்பரை வியாதிக்கு இதன்மூலம் ஒரு தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அப்படியானால் குணப்படுத்த முடியாத நோய்களையும்கூட குணப்படுத்தலாம் அல்லவா? இதன்மூலம் எயிட்ஸ்சையும் ஒழித்துக்கட்ட நல்ல தருணம் வரும் என்று காத்திருப்போம்.

எனவே, இது மகத்தான ஒரு சாதனையாக அமைவது மட்டுமன்றி, இலாபம் ஈட்டித்தரக்கூடிய சாத்தியக் கூறுகளை அதிகம் கொண்டதொரு துறையாக இருப்பதால், தனியார் நிறுவனங்களும் களத்தில் குதித்துள்ளன.

பரம்பரை அலகுகள் அனைத்தினதும் தொழிலும், பங்களிப்பும் கண்டறியப்படுமாயின், அவற்றினால் கடத்தப்படும் சிலவகைப் புற்றுநோய், டவுன்சின்ரோம் போன்ற .. நோய்களுக்கு ஒரு உருப்படியான தீர்வினைக் கண்டுவிடலாம்.

அத்தோடு இந்த நோய்களின் மூலம் அறியப்படுமாயின், இவற்றிற்கு மருந்து கண்டுபிடிப்பது மட்டுமன்றி, இவற்றினை வராமல் தடுப்பது எப்படி என்பதையும் கண்டறியலாம்.

தற்போது **DNA** இழைகளைப் பரீட்சிப்பதன்மூலம் அல்சைமர்ஸ் **(Alzheimers disease)** பரம்பரைக் குடல் புற்றுநோய், சிஸ்ரிக் பைபிரோசிஸ் **(Cystic fibrosis)**, மஸ்குவர் டிஸ்ரோபி **(Muscular dystrophy)**, குருதியுறைநோய், **(Hemophilia)** ஹன்டிங்கரன் டிசீஸ **(Huntingtons discase)** போன்ற பரம்பரை அலகுகளால் கடத்தப்படும் வியாதிகளைக் கண்டறியலாம்.

இந்தப் பரீட்சாத்தமுறை ஒருவர் நோய்க்காவியாக உள்ளாரா அல்லது கருவிலிருக்கும் குழந்தைக்கு மேற்கூறப்பட்ட நோய்கள் ஏதாவது உணடா என சோதிக்கவும் உபயோகபபடுத்தப்படுகின்றது.

தற்போது குற்றவியல் துறைகளில் **DNA** பரிசோதனை மிக முக்கியமானதொரு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. இதன் அடிப்படியிலேயே செம்மணிப் படுகொலையில் உயிரிழந்த எமது உறவுகளை கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், ஏறத்தாழ எட்டு வருடங்களுக்கு முன்பு இத்தகைய ஆய்வுகள் - பிரபல்யம் பெற்ற ஐரோப்பிய நாடு ஒன்றில் இடம்பெற்ற பிரபல்யமான வழக்கான **S.J.**சிம்சன் வழககில், தீர்ப்பாளர்களாகப் பணியாற்றியவர்கள் இந்த **DNA** பரிசோதனைமுறை பற்றிச் சரியான விளக்கத்தினைப் பெற்றிருந்ததினால் **DNA** பரிசோதனை ஆதாரங்களைக் கருத்திற்கொள்ளவில்லை. இதனால், மிகவும் கிட்டிய ஆதாரம் கை நழுவவிடப்பட்டது எனலாம்.

தனியார் நிறுவனங்களும், அரசாங்க ஆய்வுகூடங்களும் தாங்கள் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றுமாயின், இது 21 ஆம் நூற்றாண்டின் மகத்தான சாதனைகளில் ஒன்றாக அமையும என்பதில் ஐயமில்லை.

இந்த முயறசி இவர்கள் கூறியபடி பூரனமாக நிறைவேறுமா என்பது பொறுத்திருந்து தான் பார்க்க வேணடும்.

Reference :
Human genome Project
Mudpam (1999)
Time Canadian (1999)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மனநலம் நன்குடையார் ஆயினும் சான்றோர்க்கு*
*இனநலம் ஏமாப்பு உடைத்து.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நிராகரிக்கப்படும் பிரதேசவாதம்;

கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சகல பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்ட கருணாவினால் உருவாக்கப்பட்டுவரும் குழப்பமும், பதற்றமுமான சூழ்நிலைகள் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகளை மிகவும் பெரிதுபடுத்தி, பூதாகாரமாகக் காட்டி, தமிழ் மக்களிடையே பிரதேசவாதத்தை தூண்டுவதில் தென்பகுதி சிங்கள, ஆங்கில மற்றும் அரச் சார்பு வெகுசனத் தொடர்பூடகங்கள் தீவிரம் காட்டி வருவதானது - அவற்றின் பின்னணியில் நின்று செயற்படுவோரின் வக்கிர சிந்தனையை வெளிப்படையாக உணர்த்துவதாகவே உள்ளது.

குறிப்பாக சில சிங்கள ஆங்கில செய்தி ஊடகங்கள் எரிகிற வீட்டை மேலும் எரியூட்டி அதில் கூதல்காய நினைக்கும் குரூர நோக்குடனேயே செயற்பட்டு வருகின்றன எனலாம்.

தமிழ் மக்களிடையேயான முரண்பாடுகளை வளர்ப்பதன் மூலம் அல்லது புதிதாக முரண்பாடுகளை உருவாக்கி அவற்றை தீவிரப்படுத்துவதன் மூலம் தமிழ்ச்சமூகத்தின் ஒருமைப்பாட்டுணர்வை சிதைத்து, தமிழ் தேசியத்தின் இறுக்கமான கட்டமைப்பை உடைக்க சிங்களப் பேரினவாதமும், அயலக மேலாதிக்கவாதமும் தற்போது ஒன்றிற்கொன்று அனுசரணையாகச் செயற்பட்டு வருவதை அண்மைக்காலச் சம்பவங்கள் பலவும் நிரூபித்து வருகின்றன.

இந்த வகையில் கருணாவின் சுயாதீனமான செயற்பாடுகளையும், இந்த தமிழின விரோத சக்திகள் தமக்கு சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள முனைப்புடன் செயற்படுவதில் வியப்பில்லை.

அதுவும் இன்றைய தேர்தல் சூழ்நிலையில் கருணா தன சுயநலத்திற்காக துரோகத்தனமாகச் செயற்பட்டு பிரதேசவாதத்தை தூண்டுவதன் மூலம் தன்னை கிழக்கின் ரட்சகனாகக் காட்டமுயலும் நடவடிக்கைகளுக்கு தென்பகுதிப் பேரினவாதிகளின் ஆங்கில - சிங்கள ஊடகங்கள் கொடுத்து வரும் விளம்பர அனுசரணையானது, தமிழ் மக்களின் வாக்கு வங்கியை சின்னாபின்னமாக்கும் உள்நோக்கத்தைக் கொண்டதேயாகும்.

இதற்கு சில, தமிழ்மக்களின் ஒருமைப்பாட்டுக்கெதிரானதும், சிங்கள பேரினவாத சக்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி தமது வர்த்தக நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளும் தமிழ் ஊடகங்களும் நடுநிலைமைச் செயற்பாடு என்ற போர்வையில் ஆதரவு வழங்குவதும்தான் வருத்தம் தரும் விடயமாகும்.

ஆனாலும், தமிழ் மக்கள் உண்மையையும், பொய்யையும் பகுத்தறியும் தன்மை கொண்டவர்கள். தமிழின எதிர்ப்பு சக்திகளின் பிரசார ஊடகங்களின் கருத்துப் பரம்பல் உத்தி குறித்து அனுபவரீதியாக நன்கு உணர்ந்து கொண்டவர்கள். கடந்த இரு தசாப்தத்திற்கும் அதிகமான கால போர்க்கால பட்டறிவு அவர்களுக்கு அரச சார்பு மற்றும் தென்பகுதி வெகுஜன தொடர்பூடகங்கள், இந்திய தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான அணுகுமுறைகள் குறித்த தெளிவான பிரக்ஞையை ஏற்படுத்தியேயுள்ளது.

சொற்ப தொகையிலான அப்பாவி தமிழ்மக்களை இத்தகைய, வதந்திகளை வாந்தியாக எடுக்கும் ஊடகங்கள் சற்றுத் தடுமாற வைக்கலாம். ஆனாலும் தடுமாற்றமும் நிரந்தரமானதல்ல.

கடந்த வாரத்தின் கிழக்குப் பகுதி நிகழ்வுகள் - முழுத் தமிழினத்தையுமே சற்று அதிக அளவில் குழப்பத்தையும் கவலையையும் ஏற்படுத்தியது உண்மைதான்.

ஆனால், அந்த நிலைமைகளில் இருந்து தமிழ்மக்கள் இப்போது பெருமளவு மீண்டு வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

கருணாவின் அறிக்கைகளும், பேச்சுக்களும், பேட்டிகளும் நாளுக்குநாள் அவரது உள்மன நிலையின் முரண்பாடுகளையும, உறுதியற்ற தன்மையையும், மக்களுக்குத் தெளிவாக உணர்த்தி வரும் நிலையில் அவரின் பொய்முகமும் துரோகமனமும் அவர்களால் இனங்காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய நிலையில் கருணாவின் பிரதேசவாத பிரசாரத்திற்கு கிழக்கு மக்களின் ஆதரவைத்தேடும் அவரின் முயற்சி இப்போது தோல்வியடைய தொடங்கியுள்ளது தெளிவாகி வருகிறது.

கருணாவின் கலகம் பிசுபிசுத்துவிடும் எனக் கிழக்கு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதை இங்கு கூற வேண்டியுள்ளது.

இதனையே அப்பகுதி கத்தோலிக்க மதகுரு ஒருவரும் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை, நியாயமான கருத்தை முன்வைக்கும் சர்வதேச - மற்றும் உள்ளூர் தமிழ் ஊடகங்கள் கருணாவின் கருத்துக்களை நிராகரிக்கத் தொடங்கியுள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

கிழக்கிலேயே அவர் சில உள்நாட்டு, வெளிநாட்டு தமிழின விரோத சக்திகளின் தூண்டுதலின் பேரில், சுயநலத்தின் அடிப்படையில், கைக்கூலியாகச் செயற்படுகிறார் என்ற கருத்து மக்களிடையே வேரூன்றிப் பரவத் தொடங்கிவிட்டது.

இவரின் செயற்பாடுகள் ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்தையே இருளாக்கிவிடும் என்ற அச்சம் மக்களிடையே உருவாகத் தொடங்கி விட்டமையானது ஆரோக்கியமான சூழலை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

- இதுவே, இன்றைய காலகட்டத்திற்கு அவசியமானதுமாகும்.

## நாடும் நடப்பும்



## நெடுந்தீவுப் பகுதியில்

# மக்களை அச்சுறுத்தும் மணல் இலையான்கள்; ஆய்வுகள் வெளிக்கொணரும் தகவல்கள்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப்பகுதியில் நீண்டகாலமாக மக்களைத் துன்புறுத்தி வந்த நிலப்பூச்சி தொடர்பாக கடந்த வாரம் பூச்சியியலாளர்களால் நெடுந்தீவின் பலபகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் திடுக்கிடும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குளக்கரைகள், வீடுகள், பொது இடங்கள், மிருகங்கள், போன்றவற்றில் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து இந்தப் பூச்சியானது " மணல் இலையான்கள்" எனவும், இதன்மூலம் "லீஸ்மானியஸ்" எனப்படும் நோய் பரப்பப்படும் எனவும் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், தற்போது இந்த நோய்க்கிருமிகள் தீவில் இல்லை எனவும், இந்திய அகதிமுகாம்களிலுள்ள அகதிகள் மீளத்திரும்பும் போது இந்நோய்க்கிருமிகள் காவி வரப்படு மானால் மணல் இலையான்கள் மூலம் இந்த நோய் ஆபத்து ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இப்பூச்சி ஆய்வுகளை யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த சி.சிவமோகன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் நேவின் சுரேந்திரன் ஆகியோரின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# சமுர்த்தி வங்கிகளூடாக கடன் வழங்க நடவடிக்கை

சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மூலம் யாழ் மாவட்டத்தில் கடன் வழங்கல் நடவடிக்கை எதிர்வரும் வாரங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சகல வங்கி முகாமையாளர்களையும் சமுர்த்தி வங்கி நடவடிக்கைப் பிரதிப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

கடந்த வாரத்தில் இடம்பெற்ற சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களுக்கான 'கடன் வழங்கல்' தொடர்பான பயிற்சி வகுப்பின் முடிவின் போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. பயிற்சி வகுப்பு முடிவடைந்ததுமே கடன் வழங்கல் தொடர்பான நடவடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கு எழுத்துமூலமான அறிவித்தல் தேவை இல்லை எனவும் தெரிவித்துள்ளர்.

கடன் வழங்கல் நடவடிக்கை இம் மாவட்டத்தில் தற்போதே ஆரம்பிக்கப்படுவதனால் பயிர்ச்செய்கை மீன்பிடி போன்றவற்றுக்கு 6 மாத தவணை கொண்ட ரூபா 50 000 உம், சுய தொழிலுக்கு ஒரு வருடத் தவணை கொண்ட ரூபா 10 ஆயிரமும் மூன்று மாதத் தவணை கொண்ட இடர் கடன் ரூபா 500 உம் நுகர்வுக் கடனாக ரூபா 1000 உம் வழங்குமாறும், இதன் அறவீடுகள் திருப்திகரமாக இருப்பின் ஒரு வருடத்தில் கடன் தொகை அதிகரிக்கப்படும் என அறிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (44)

# வாக்காளர் அட்டைகள் இன்றுமுதல் விநியோகம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக தபால் மா அதிபர் கே.ஏ. எஸ்.சேனாதீர தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும்.

வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கும் பணி எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்படைக்கப்படாத வாக்காளர் அட்டைகள் 26 ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை தபாலகங்களில் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு கையளிக்கப்படும்.

வாக்காளர் அட்டைகள் வைக்கப்பட்டுள்ள தபால் அலுவலகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# ஆஞ்சநேயர் கோவிலருகில் புதிய பஸ் தரிப்பிடம்!

போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகத் தெரிவித்து அகற்றப்பட்ட மருதனார்மடம் சந்திக்கருகாமையில் இருந்த பஸ் நிலையம் தற்போது சுந்தர ஆஞ்சநேயர் கோவிலுக்கருகில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் தரிப்பிடத்தை அப்பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர். தற்காலிகமாக தகரங்கள் கொணடு அமைக்கப்பட்டுள்ள இந்த பஸ்தரிப்பு நிலையத்தை தற்போது இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பாவித்து வருகின்றனர். எனினும், இந்த இடத்தில் இருக்கை வசதிகள் கொண்ட பஸ்தரிப்பு நிலையமொன்று அமைத்துத் தரப்படவேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (94)

# ஓய்வூதியக் கொடுப்பனவில் மோசடி செயலக ரீதியாக விபரம் சேகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மோசடி இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து பிரதேச செயலகங்கள் ரீதியாக ஓய்வூதியர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்க நிர்வாக அலகுகளில் நிலவும் சில குறைபாடுகளை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் சிலர் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மோசடியில் ஈடுபட்டு வருகன்றமை நாட்டின் பல பாகங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இறந்தவருடைய ஓய்வூதியத்தை அவரது மனைவியோ அல்லது திருமணம் முடிக்காத மகளோ பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இந்த நடைமுறைகளை விலத்தியும் சிலர் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை இரகசியமான முறையிலே பெற்று வருகின்றனர். இதனால் அரசுக்கு வருடா வருடம் மிகப் பெரிய தொகை வீணாகின்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளிலே நிகழும் சிக்கலைத் தவிர்ப்பதற்காகவே, தற்போது பிரதேச செயலக ரீதியாக ஓய்வூதியம் பெறுவோரின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கிராம அலுவலரின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகங்களில் சமர்ப்பிப்பதன் மூலமே இம்மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளை உரியவர்கள் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான கடிதங்கள் ஓய்வூதியம் பெறுவோருக் த் தனித்தனியே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (94)

செய்திக்கட்டுரை

# புறாக்கூடு போன்று செயற்படும் மானிப்பாய் மீன்சந்தை

காவலூர் விஜேந்திரன்

மீன் சந்தையில் உடனுக்குடன் மீள் கழிவுகளை அகற்றும் புதுவித பாணியை - நாய்கள், பூனைகள் ஊடாக மானிப்பாய் மீன் சந்தை வியாபாரிகள் நிறைவேற்றி வருகின்றனர். மீன்கள் வெட்டும் போது, வெட்டுபவரிற்கு அருகில் நின்று மீன் கழிவுகளையும், சில வேளைகளிலும் வெட்டிய மீன்களையும் நாய்கள் தமது உணவாக்கின்றன. இவ்வாறான சுகாதாரச் சீரகேடுகள் நாளாந்தம் இடம்பெறுகின்றது. மானிப்பாய் பொதுச் சந்தை, வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ளது. நீண்ட வரலாற்றைக் கொண்ட இந்தச் சந்தை - வாங்கி விற்போர் சந்தையாகவுள்ளது. (விற்பனையாளர் - நுகர்வோர் சங்கமம்)

இடவசதி இன்றி இயங்கிவரும் இந்தச் சந்தைக்கு, நாளாந்தம் 1000 பேர் வரையான நுகர்வோர்கள் வந்து போகிறார்கள். மானிப்பாய்ப் பிரதேசத்திலுள்ள பல சிற்றூர்களும் இந்தச் சந்தையை உபயோகித்து வருகின்றன. இந்தப் பகுதியில் நீண்டகாலமாக கிராமசேவையாளராக பணியாற்றி வரும் இராஜபல்லவன் - இராஜயோகன் (வயது 55) தனது கருத்தை முன்வைக்கின்றார். பிரதேசசபையின் கண்காணிப்பிலேயே இந்தச் சந்தை இப்பொழுது இயங்கி வருகிறது. அவர்கள் சரியாக தமது பணிகளை மேற்கொள்வதில்லை. சந்தை அமைப்பு பிழை. திறந்த சந்தையாக அதேநேரம், மீன்கள் வைத்து விற்கக்கூடிய மேடை அமைப்பும் அமைக்கப் படவேண்டும்.

சன நெருக்கடியாகவே உள்ளது. தரத்தைப் பார்த்து, விலை கேட்டு வாங்கமுடியாது. மீன்களை நிறுத்து விற்பனை செய்யும் முறையைக் கொண்டு வரவேண்டும். வடமராட்சிப் பகுதிகளில் இருந்தே அநேகமான மீன்கள் வருகின்றன.

இங்கு விற்பனை செய்யப்படும் மீன்களில் 60% ஆனவை உடன் மீன்கள் இல்லை. மீன், திருக்கை போன்றவற்றை வைத்து வெட்டுவதும், அவர்கள் இருந்து விற்பனை செய்வதும் ஒரே இடத்தில்தான். இதற்கென தனியான இடம் அமைக்கப்பட வேண்டும். கழிவுகளை உரியமுறையில் அகற்ற குழிகளை அமைக்கவேண்டும். கழிவுநீர் போவதற்கு வாய்க்கால்களை சரியான முறையில் அமைக்கவேண்டும். மக்கள் வசதியாக வந்துபோகக்கூடிய வகையில் இடவசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு ஆலோசனைகளை குறிப்பிடுகிறார்கள் கிராமசேவையாளர். நீண்ட நாட்களாக பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள மக்கள் சார்பாக தனது கருத்தை முன்வைக்கின்றார். இராஜயோகன்.

வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை பொது சுகாதார் பரிசோதகர் அலுவலகம், பணிமனைகள் சந்தைக்கு மிக அண்மையில் இருப்பது நினைவு கூரத்தக்கது. சந்தைக்கருகில் கிணறு, மலசலகூடம், கொல்களம் அமைக்கப்பட்டுள்ளது.

கிணற்றுக்கு அருகிலுள்ள பகுதியிலேயே மேலதிக மீன் கழிவுகள், கோழிகளின் கழிவுகள் பதைக்கப்படுகின்றன. மீண்டும் மீண்டும் ஒரே இடத்தில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளை நாய்கள் விட்டுவைப்பதில்லை. புதைக்கும் கழிவுகளை நாய்கள் வெளியே எடுக்க, காகங்கள் சந்தையை அண்மித்துள்ள குடியிருப்பாளர்களின் கிணறுகளில் அவற்றைப் போடுகின்றன. திட்டமிட்டு மேற்கொள்ளும் செயற்பாடுகள்போல், இவ்வாறான அசௌகரியங்கள் இடம் பெறுவதால், இப் பகுதி மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

வலிதென்மேற்கு பிரதேச சபையினர் - மானிப்பாய் பொதுச் சந்தை தொடர்பாக கூறுகையில் இச் சந்தையானது முழுமையான புதிய வடிவில் மாற்றி அமைக்கப்படவுள்ளது. மீன் சந்தை பெரும் இன்னல்கள் நிறைந்ததாகவே இயங்கிவருகின்றது. நவீன கட்டிட அமைப்பு முறையில் மீன் சந்தை உள்ளடங்களாக நவீன அமைப்பு முறையுடன், சந்தைக்குரிய பரிமாணங்களிற்கு அமைவாக அமைக்கப் படவுள்ளது. இதற்கென சந்தைக்கு அருகில் காணி ஒன்றும் கொள்வனவு செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



மானிப்பாய் பொதுச் சந்தையைச் சுற்றிவர அடைக்கப்பட்டு அமைக்கப்பட்டகூண்டு (கூடு) போலவே அமைந்துள்ளது. இந்தச் சந்தை அமைப்பில் மாற்றம் கொண்டு வரவேண்டும். திட்டமிடாது சந்தைக்குரிய பரிமானங்கள் இன்றி அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் தரையில் வைத்தே மீன்கள் விற்பனை செய்யப் பட்டு வருகிறது. அதேயிடத்திலேயே மீன்கள், திருக்கை போன்றவற்றை வைத்து வெட்டுகிறார்கள். இதைவிட சந்தைக்கு வெளியே அமைக் கப்பட்ட கழிவு வாய்க் கால்களிலும் சில் வியா பாரிகள் தமது விற் பனை யை மேற்கொண்டு வருகின்றார்கள்.

சுற்றி அமைக்கப்பட்ட சிறிய இடத்தில் சன நெருக்கடி நிறைந்த நேரங்களில் மீன்களை வெட்டும்போது அதன் கழிவுகள் மீன் வாங்க வருபவர்களின் உடை களை அழுக்காக்குகின்றன. இவற்றை இங்கே வருவோர் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக் கொள்கின்றார்கள்.

மானிப்பாய் பிரதான வீதியில் கடைத்தொகுதிகளின் பின்னால் சந்தை அமைந்துள் ளது. இதனுடன் கடைகள், இறைச்சிக்கடைகள், சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள், மரக்கறிச்சந்தை இவற்றுடன் சந்தையின் பிரதான நுழைவாயிலில் பழங்கள் வைத்து நீண்டகாலமாக விற்பனை செய்யும் பழக்கடைகளும் நெருக்கமாக அமைக் கப்பட்டுள்ளது. இச்சந்தையானது திறந்த சந்தையாக பகுதி பகுதியாக பிரித்து மக்களின் வசதிகளுக்கு அமைவாக மாற்றி அமைக் கப்படவேண்டும்.

சந்தையின் தோற்றப்பாடுகளுக்கு அமைவாக அமைக்கப்பட வேண்டும். சுகாதார முறைகளை உரிய வகையில் கடைப்பிடிக்க வியாபாரிகளும், சந்தை சார்பானவர்களும் நடவடிக்கைகளை எடுப்பதுடன், உரிய நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். பலதரப்பட்ட மக்கள் வந்து போகும் இவ்விடத்தில், மீன்களை இவர்களின் தெரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும். அதேவேளை மீன்களை நிறுத்து, நியாயமான முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

கழிவுகளை உரிய இடங்களில் சரியானமுறையில் அகற்றுவதற்கு வியாபாகளும், பொறுப்பானவர்களும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சந்தையையும் சந்தை சார் சூழலையும் சுகாதார முறையில் தொடர்ந்து பேணிவர ஒவ்வொருவரும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

மழைகாலங்களில் மழைநீர் தேங்கி நிற்கின்றது. இவற்றை வெளியேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொண்ட போதிலும், அவை பூரணமாக இடம்பெறவில்லை. மழைநீர் தேங்காமல் உடனே வெளியேறக்கூடிய ஒழுங்குகளை உரியவர்கள் மேற்கொள்ளவேண்டும்.

நீண்ட சந்தைப் பாரம்பரியத்தை கொண்ட மானிப்பாய் பொதுச் சந்தை நாளாந்தம் பல பாவனையாளர்களை உள்வாங்குகின்றது. இச்சந்தைக்குரிய பாவனையாளர்கள் நீண்ட காலமாக அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இந்த நிலை மாற்றப்படவேண்டும். இந்தப் பகுதி வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான வசதிகளை உரியவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்களா? கூண்டிற்குள் சென்று மீளமுடியாது திருப்தியற்ற கொள்வனவாளனாக நெரிபடும் நிலை தொடருமா?

# பார்வைகள் பதிவுகள் பகிர்வுகள்

தமிழ்மக்கள் தம் உரிமைகளுக்கான கருத்தனை தெரிவிப்பதற்காக, எதிர்வரும் தேர்தலைப் பயன்படுத்த தயாராகின்ற சூழலிலே, அதனைக் குழப்புவதற்குப் பல்வேறு சக்திகள் முனைப்பாக செயற்படுகின்றன. ஆனந்தசங்கரியின் தலைமையிலான சுயேட்சைக் குழுவினர்- உதயசூரியன் சின்னத்தை முடக்கியதன் மூலம் குழப்பத்தை ஏற்படுத்த முனைந்தது. ஆயினும் முதல் தலைமுறை தமிழனின் விடுதலைப் போராட்டகால, அதாவது சாத்வீக கால தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சிச் சின்னமான வீடு - தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சின்னமாக எடுக்கபபட்டது. அச்சின்னம் தமிழர் தாயகத்தின் குறியீடாகவும் கொள்ளப்பட்டது. அதன் கீழ் தமிழரசுக்கட்சி என்ற பெயரில் தேர்தல் வேட்புனுத் தாக்கலில் பதிவுசெய்யப்பட்டு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பரப்புரை செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. துரோகத்தனங்கள் தமிழீழ விடுதலைப்போராட்டம் முனைப்புறும் வேளைகளில் தம்மை அதிகமாகவே செயற்பட வைக்கும் ஆனந்த சங்கரியும், அவரின் குழுவினரும் உதயசூரியன் சின்னத்தை முடக்கியதோடு, தமிழ் மக்களின் வாக்குகளை சிதைக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் சுயேட்சையாகவும் போட்டியிடுகின்றன. அதேவேளை அரச ஒட்டுண்ணிப்படைகளான EPDP, EPRLF, (வரதராஜ) ஆகிய குழுக்களுடன் PLOT உம் தமிழ் மக்களின் வாக்குகளை சிதைப்பதில் திட்டமிட்டு செயற்படுகின்றன.

தீவகத்தில் படையினரின் துணையோடு செயற்படும் EPDP யினர் - கடந்த தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரைத் தாக்கி கொன்றதுபோல் இம்முறையும் செய்ய முயலக் கூடும் என்றே அஞ்சப்படுகின்றது. நெடுந்தீவு மக்களால் முன்னர் வெளியேற்றப்பட்ட EPDP மீளவும் கடற்படையினரின் துணையோடு ஒரு படைநடவடிக்கை போன்றே நெடுந்தீவினுள் நுழைந்து, படையரண்களுள் பதுங்கியிருக்கின்றனர்.

தமிழ் மக்கள் தம் உரிமைகளுக்காக - ஒரு கருத்து வெளிப்படுத்தலாக எதிர்வரும் தேர்தலை பயன்படுத்த முயல்வதை, குழப்பப் பல சக்திகள் தீவிரமாக செயற்படுகின்றன எனக் குறிப்பிட்டோம்.

ஒருசக்தி உதய சூரியன் சின்னத்தை முடக்கியது. இன்னொரு சக்தி வீடு சின்னத்தையும் முடக்க நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழரசுக்கட்சியின் தலைவர் என்கின்ற பெயரில் வெளிநாடு ஒன்றில் தற்போது வாழ்ந்துவரும் ஒருவர் - தானே தமிழரசுக்கட்சியின் தலைவர் எனவும் - தன்னைக் கேட்காது வீடு சின்னத்தை பயன்படுத்த முடியாது என்றும் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்தவேளையில் ஏன் இப்படிச் செய்கின்றீர்கள் என ஊடகம் ஒன்று கேட்ட போது, தானே தலைவர் எனவும் தன்னைக் கேட்காது எப்படி அச்சின்னத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

இனிமேல் இப்படி நடக்கவிடமுடியாது எனவும் அவர் எச்சரித்துள்ளார். இப்பொழுது இந்த சின்னத்தை தமிழ்மக்கள் பயன்படுத்துவதை தடுக்கும் அல்லது அச்சுறுத்தும் நோக்கிலேயே அந்த மனுத்தாக்கலைச் செய்துள்ளார். தமிழரசுக்கட்சி ஏன் தொடங்கப்பட்டது என்பதை, குழப்பத்தை ஏற்படுத்தமுனையும் நபர் விளங்கியிருந்தால், இப்படி நடந்துகொண்டிருக்கமாட்டார்.

தந்தை செல்வா தொடக்கிய கட்சியின் தலைவர் எனப்பட்டவர் இவரெனில், தமிழ் மக்கள் தம் உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக, இதுவரை பட்டு வரும் துயரம் - ஈகம் - துன்பம் ஆகியவற்றை உணர்ந்திருந்தால், இன்று இந்தச்சின்னம் எதற்காக பயன்படுத்தப்படுகின்றது என்பதை விளங்கி பெருமை கொண்டிருக்கலாம். ஆனால், அப்படியல்லாது குழப்பத்தை ஏற்படுத்த முனையும் இந்த சக்தியின் பின்னணியை என்னவென்று கூறுவது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மூலம் தமிழ் மக்களின் ஒரு கருத்து வெளிப்பாட்டை உலகுக்குச் சொல்ல திரண்டு வருகின்றனர்.

இதனை குழப்ப துரோகச் சக்திகள் பல்வேறு பின்னணியில் மிகத்தீவிரமாக செயற்படுகின்றன. இத் தமிழின விரோத சக்திகளைக் கண்டு, தமிழ் மக்கள் அஞ்சமாட்டார்கள் ஏனெனில், இவற்றைவிட வலுவான சக்திகளை யும், இராணுவங்களையும் வென்றுதான் தமிழ்மக்கள் இன்றுள்ள நிலையை எட்டியுள்ளனர்.

இந்த விரோத சக்திகளைத் தமிழ் மக்கள் என்றைக்குமே மன்னிக்கவோ, ஆதரிக்கவோ மாட்டார்கள். தமிழ்மக்களின் எழுச்சியை தாங்க முடியாத, கையாலாகத்தனமாகவே தேர்தல் சின்னங்களை முடக்கும் முயற்சிகளை மேற்கொள்ளும் துரோகத்தனங்கள் நடக்கின்றன. இவற்றுக்கெல்லாம் தமிழ் மக்கள் நிச்சயம் பதிலடி கொடுப்பார்கள் என்றே உலகத் தமிழினம் எதிர்பார்க்கின்றது.

திரு. த.திரு

# புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXIX - சிவா சின்னப்பொடி

## பயங்கரவாத வன்முறையாக வெடித்த குழுக்களுக்கிடையேயான மோதல்...

இவ்வாறான வெளிச்சம் போட்டுக் காட்டல்கள் - தனிநபர்கள் மற்றும் குழுக்களிடையிலான போட்டியாக மாறி பின்னர் அது மோதலாக வெடிதததது.

பாரிஸ் லா சப்பல் பகுதியில் - இரண்டு அல்லது மூன்று குழுக்களிடையில் ஏற்பட்ட மோதல்கள் - துப்பாக்கிச்சூடு, கத்திக்குத்து, வாழ் வெட்டு என்று பயங்கர வன்முறையாக



வெடித்தது.

தமிழ் மக்கள் லா சப்பலுக்கு செலலுவதற்கு அஞ்சும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாரிஸ் லா சபபல் பகுதிக்கு வந்த ஒரு குழுவை, இனணொரு குழு காரில் துரத்திச் சென்று 'போத்து லாவில் லட்' பகுதியில் வைத்துச் சுட்டதில் ஒரு 28 வயது இளைஞர் இறந்து விட்டார்.

காரணம் என்னவென்று விசாரித்தபோது, சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன் - சுட்ட இளைஞரைப் பார்த்து வைத்திருந்த ஒரு பெண்ணைப் பார்த்து சைட் அடித்துவிட்டார். என்பதே காரணமாகும்.

இத்தகைக்கும் அந்தப் பெண்ணுக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் இருந்தது.

இங்கே தாயகத்தில் படையினரதும், சிங்கள இனவெறியர்களதும் கொடூரச் செயல்களுக்கு அஞ்சி, நமது இளம் பெண்கள் வெளியே தனியாக செல்வதற்கு பயந்ததுபோல, பாரிஸ் லா சப்பல் பகுதிக்குச் செல்ல பயந்தார்கள்.

இளம் பெண்கள் இருக்கும் வீட்டுத் தொலைபேசி இலக்கத்தை, தொலைபேசிப் புத்தகத்தில் தேடிக்கண்டுபிடித்து, அவர்களின் கணவன்மார் வேலைக்குச் செல்லும் நேரம் எது என்பதை ஊகித்துக் கொண்டு, தொலைபேசி எடுத்து மிரட்டுவது, எழுத்தில் எழுதமுடியாத விச வார்த்தைகளைப் பேசி அவர்களை தொடரச்சியாகத் தொல்லைப்படுத்துவதென்று ஒரு பெரிய அநியாயமே நடந்தது.

இந்தத் தொல்லைகளுக்குப் பயந்துபோன பல குடும்பங்கள் தங்கள் தொலைபேசி இலக்கங்களை மேலதிக பணம் கொடுத்து சுலபத்தில் வெளியார் கண்டுபிடிக்க முடியாத சிவப்பு பட்டியலில் இலக்கங்களாக மாற் றின. ( சிவப்பு பட்டியல் இலக்கம் என்பது - அதைப் பாவிப்பவர் வெளி யில் சொன்னால் அல்லது மற்றவர் களால் அதை கண்டுபிடிக்கமுடியாது)

கடைக்காரர்களை மிரட்டுவது - வருவோர், போவேரை மிரட்டுவது, இரவிரவாக உசசதொணியில் பாட்டைப் போட்டு தெருவில் நின்று ஆடுவது, பியர் போத்தலை மேலே எறிந்து இது கீழே விழுவதற்கு முன்னர் அதை இன னொரு போத்தலால் அதை அடித்து உடைப் பது என்று இந்தக் குழுக்களின் அட்டகாசம் பொறுக்க முடியாதநிலையில், 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாரிஸ் லா சப்பல் பகுதியிலிருந்த மக்கள் - தமது பகுதி நகர முதல்வருக்கு தமிழர்களை அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றும்படி கூட்டாகச் சேர்ந்து கடிதம் எழுதினார்கள்.

இந்தக் கடிதத்தை தொடர்ந்து காவல் துறையினர் அந்தப் பகுதியில் தமது சுற்றுக் காவல் பணியை அதிகரித்தபோதும், இந்த அட்டகாசம் கொஞ்சம் குறைந்ததே அன்றி நிற்கவில்லை.

காவல்துறையினர் இல்லாத நேரம்பார்த்து இந்தக் குழுக்கள் வந்து அட்டகாசம் புரிந்தனர.

இதனால், அந்தப் பகுதி மக்கள் ஒன்று திரண்டு தமிழர்களை வெளியேற்றுமாறு கோரி, லா சப்பல் நகரத்தில் பிரதான வீதியான புல்லாது பிறபேர்க் சென்ரனியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

பாரிஸ் நகரம் பொதுவாக பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நகரம். பெரும்பாலும் அந்த நகரத்தில் வாழுகின்ற மக்கள் ஒருவரை ஒருவர் அனுசரித்து வாழப் பழக்கப்பட்டவர்கள். அந்த நகரத்தில் இனவாத, நிறவாத சக்திகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. இப்படிப்பட்ட பாரிஸ் நகரத்தில் - தமிழ் மக்களுக்கு எதிரான ஊர்வலம் ஒன்றை பாரிஸ மக்கள் நடத்தியதை, பிரெஞ்சு அரசாங்கம்- கவனிக்கத்தக்க விடயமாக கணக்கில் எடுத்துக்கொண்டது.

இந்த வன்முறைகள் எல்லாம் விடுதலைப் புலிகளாலேயே செய்யப்படுவதாக. பாரிஸிலுள்ள இலங்கைத் தூதரகம் - பிரெஞ்சு அரசாங்கத்துக்குப் போட்டுக்கொடுத்திருந்தது.

இலங்கைத் தூதரகத்தின் இந்தச் செயற்பாடு அதுதான். இந்தக் குழுக்கள் இயங்குவதற்கான பின்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறதோ என்ற சந்தேகத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

அந்தக் காலத்தில் - பாரிஸில் இருந்த சில மாற்றுக் கட்சி 'கனவான்கள்' இலங்கைத். தூதரகத்துடனும், இந்தியத் தூதரகத்துடனும் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாக இருந்தார்கள்.

தமிழ் மக்கள் ஒரு வலிமைமிக்க சமூக அமைப்பாக உருபெற்று விடாமல் தடுத்து - ஊர, பிரதேசம், குழுக்கள் என்ற வகையில் பிரிந்து செயற்படுவதற்கான வேலைகளைச் செய்வதற்கு இந்த இளைஞர் குழுக்களை அந்தக் கனவான்கள் பயன்படுத்தினர்.

இங்கே தாயகத்தில் - விடுதலையை நேசித்து வந்த அப்பாவி இளைஞர்களை, இவர்கள் எப்படி அந்நிய சக்திகளின் நோக்கங்களுக்கு பயன்படுத்தி, அவர்களது விடுதலை உணர்வை மழுங்கடித்து கூலிப்படைகளாக்கி, தாயக விடுதலைப் போராட்டத்தை விட்டே அந்நியப்படுத்தினர்களோ? அதே வேலையை புலம் பெயர்ந்த நாடுகளிலும் செய்தார்கள்.

(தொடரும்...)

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

## அமெரிக்க இராஜாங்க செயலர் —
# இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு எதிர்வரும் திங்களன்று விஜயம்!



அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் தனது தெற்காசிய பயணத்தில் - இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தவேளையில் இராஜாங்க செயலர் கொலின் பவல் இருநாடுகளிடையேயும் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களை விரைவுபடுத்தவுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையில் காஷ்மீர் பிரச்சினையும் விவாதிக்கப்படவுள்ளதாக இரு நாடுகளும் ஆரம்பத்தில் சம்மதம் தெரிவித்திருந்தன.

ஆனால், நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் பாகிஸதான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ள கருத்தில் - காஷ்மீர் பிரச்சினை இருநாடுகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுககளில் முக்கியமாக விவாதிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பின் கருத திற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இருநாடுகளிடையேயும் நடைபெறும் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் இறுதியில்தான் காஷ்மீர் பிரச்சினை விவாதிக்கப்படும் என்பதற்கு ஏற்கனவே இரு நாடுகளும் இணங்கியிருந்ததாக தெரிவித்துள்ளது.

இதனிடையே இந்திய நிர்வாகத்தில் அமைந்துள்ள காஷ்மீர் பிரிவினைவாதிகள் நடத்தும் தாக்குதல்களை சுதந்திரப் போராளிகளினால் நடத்தப்படும் போர் என பாகிஸ்தான் வர்ணித்தமையையும், இந்தியா கண்டித்திருந்தது. அத்துடன் பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியையும் பயங்கரவாதம் எனக் குறிப்பிட்டதாகவும் இந்தியா தெரிவித்தது.

இதேவேளை இந்திய விஜயத்தின்போது அமெரிக்க இராஜாங்க செயலர் - இந்தியாவும், அமெரிக்காவும் விண வெளித்திட்டம், வர்த்தகத்தில் உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது ஆகியன தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் எதிர்பார்க்கின்றன.

அமெரிக்க இராஜாங்க செயலரின் பாகிஸ்தானுக்கான விஜயத்தில் அல்கொயதாவின் தலைவர் பின்லாடனைக் கைதுசெய்வதற்கான முயற்சிகளை விவாதிப்பதற்கும் திட்டமிட்டுள்ளார்.

மேலும், அமெரிக்க இராஜாங்க செயலரின் ஆப்கானுக்கான விஜயத்தில் அமெரிக்காவின் உதவிகள் ஆப்கானுக்குத் தொடரும் என ஜனாதிபதி கமிட் கர்சாயிடம் தெரிவிப்பார் எனவும் கருதப்படுகிறது.

# ஈராக்கிலுள்ள ஸ்பெயின் துருப்புக்கள் மீளத் திருப்பி அழைக்கப்படுவார்கள்!

## அந்நாட்டு புதிய பிரதமர் தெரிவிப்பு



ஸ்பெயினில் நடைபெற்ற தேர்தலில் சோசலிச கட்சி வெற்றிபெற்றுள்ளது. இந்தக் கட்சியின் தலைவர் சபாரிரோ பிரதமராகத் தெரிவுசெய்யப்படவுள்ளார்.

பிரதமராகப் பதவியேற்றபின் தான ஈராக்கில் பணிபுரியும் ஸ்பானியப் படைகளை வெளியேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.




ஈராக்கில் 1300 ஸ்பானிய படையினர் கடமையாற்றி வருகின்றனர்.


இதேவேளை ஸ்பெயின் படையினர் ஈராக்கில் பணிபுரிவதற்கு உள்நாட்டில் பலமான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக்கில் ஜூன் 30 ஆம் திகதிக்குப் பின்னர் ஈராக்கியர்களிடம் ஆளும் இறைமை வழங்கப்படாவிட்டால் ஸ்பானியப் படையினர் அழைக்கப்படுவார்கள் என சபாரிரோ தெரிவித்தார்.

இதனிடையே மட்றிட் ரயில் குணடுத் தாக்குதலின் பின்னரே சோசலிச கட்சியின் செல்வாக்கு அதிகரித்திருநதது. குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் சோசலிச கட்சி 42 வீதமான வாக்குகளைப் பெற்றிருந்தது. மத்திய வலதுசாரிக் கட்சி 38 வீதமான வாக்குகளையே பெற்றிருந்தது.

200 பேர்வரை கொல்லப்பட்ட மட்றிட் ரயில் குண்டுத் தாக்குதல், பொதுத்தேர்தலில் முன்னைய அரசைப் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்குக் காரணமாக அமைந்ததாக பி.பி.ஸியின் கிரிஷ் மொரிஷ் தெரிவித்தார்.

# ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் அதிபர் புடின் அமோக வெற்றி



(மொஸ்கோ)

ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தேர்விற்கான தேர்தல் நடைபெற்றுள்ளது. அரசசார்பற்ற கருததுக் கணிப்பீடு நிலையம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளில் ஜனாதிபதி புடின் 69 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளதாகக் கணிப்பிடபபட்டுள்ளது. இக் கணிப்பீடு 1200 தேர்தல் நிலையங்களில் 120,000 மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனிடையே நள்ளிரவுக்குப் பின் ஆதரவாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய புடின் - வாக்களித்த மககளுக்கு நன்றி தெரிவித்துள்ளது டன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பணியாற்றப்போவதாகவும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கும் உறுதியளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே க்ம்யூனிச கட்சி 'ரிகோலியா க்ரிரொநோவ்' 12.6 வீதமான வாக்குகளையே பெற்றுக்கொளவார் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. வாக்குச் சாவடிகள் மூடப்பட்டதும், கிரெம்ளினில் பொருட்காட்சி நிலையம் ஒன்று தீப்பற்றிக்கொண்டதாகவும், அவசரகால பணியாளர்கள் மின கம்பிகளின் ஒழுக்கினால் இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாமெத் தெரிவித்தனர்.

தறபோது மேற்கொண்டுள்ள கணிப்பீடுகளின் மூலம் லிபரல் கட்சியின் பொருளாதார நிபுணரான இறினா அகமட்டும், தேசியக் கட்சியைச் சேர்ந்த சேர்கெய் கிளாஷ்வேயும் 4.7 வீதமான வாக்குகளை பெற்றிருநதனர். சோவியத் ஐக்கிய இராட்சியம் 1991 பல மானிலங்களாகப் பிளவுபட்டபின் நடத்தப்பட்ட 3 ஆவது ஜனாதிபதி தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# சூரியக் குடும்பத்தில் பத்தாவது கோள் வானியல் அறிஞர்களால் கண்டுபிடிப்பு!

சூரிய குடும்பத்தின் 10 ஆவது கிரகம் எனக்கருதப்படும் புதிய கோள் ஒன்றினை வானியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

அண்மையில் விண்வெளிக்கு அனுப்பப்பட்டிருந்த 'ஸ்பிற்சர்' எனப்படும் தொலைநோக்கி மூலம். இந்தக் கிரகத்தை அவதானித்துள்ளனர். இக்கோளுக்கு 'செட்னா' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இக்கோள் சூரிய குடும்பத்தின் புதிய கோள் என்பது தொடர்பாக விஞ்ஞானிகளினால் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

கபில் தொலைநோக்கி கருவியும் இப்புதிய கோளை அவதானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் திங்கட்கிழமை புதிய கோள தொடர்பான விபரங்களை நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவிக்கவுள்ளது.

1930 ஆம் ஆண்டு புளூட்டோ எனப்படும் கோள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து 'செட்னா' எனப்படும் கோள் சூரியனைச் சுற்றி வருகின்றது. இதன் அளவு இது வரை கணிக்கப்படவில்லை.

இதே நேரத்தில் புளூட்டோவிலும இக்கோள் பெரிதாக அமையலாமென பி.பி.சி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக் கணிப்பீடுகளின்மூலம்- பூமியிலிருந்து 10 பில்லியன் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இந்தக்கோள சஞ்சரித்து வருவதாக அறிவிக்கப்படடுள்ளது.

இந்தக் கிரகம் கண்டுபிடிக்கப்பட்டதும் அரிசோனாவில் அமைந்துள்ள ரெனகரா அவதான நிலையத்தின் மூலம் இக்கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் சுற்றுவட்டப் பாதையை



அறிந்துகொள்வதற்கு இக்கிரகம் தொடர்பான தகவல்களை விஞ்ஞானிகள் அவதான நிலையத்திடம் கேட்டுள்ளனர்.

## பாகிஸ்தானில் உள்ள —
# அமெரிக்க தூதுவராலயம் முன் கார்க்குண்டு கண்டுபிடிப்பு!



பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் அமெரிக்க தூதுவராலயத்திற்கு முன் கார்க்குண்டொன்று செயலிழக்க வைக்கப்பட்டது. வாகனமொன்றில் காணப்பட்ட நீர்த்தொட்டிக்குள் இரசாயனத் திரவம் நிரப்பப்பட்டு, குறித்த நேரத்தில் வெடிக்கக்கூடியவாறு குண்டு தயார்செய்யப்பட்டிருந்தது.

அமெரிக்க தூதுவராலயத்தின் முன் வாகனத்தை நிறுத்திச்சென்ற இருவர், தூதுவராலய பாதுகாவலர்களிடம் வாகனத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

சந்தேகத்திற்கிடமான வாகனத்தில் பொலிஸார் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர். பின்னர் அதனுள் காணப்பட்ட வெடிபொருட்கள் செயலிழக்கச்செய்யப்பட்டது.

இதனிடையே நாளைமறுதினம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க அறிவித்தல்

**பாராளுமன்றத் தேர்தல்கள் – 2004.04.02**
**சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டத் திகதிகளில் மாற்றம்**

| முன்னர் அறிவிக்கப்பட்ட திகதி | தற்போது மாற்றப்பட்ட திகதி |
|---|---|
| 18.03.2004 | 22.03.2004 |
| 19.03.2004 | 23.03.2004 |

இதற்கமைய உரிய மாற்றப்பட்ட திகதிகளில் முன்னர் அறிவிக்கப்பட்ட நேரத்தில் தவறாது பங்குகொள்ளுமாறு அறிவித்துக் கொள்கின்றேன்.

தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல. 10
யாழ்ப்பாணம்.

(சி-2321)

## Praba's Institute of Beauty Theraphy



நிறுவனத்தின் யாழ் மண் மாணவர்களுக்கான மேலதிக ஒருநாள் பயிற்சி வகுப்புக்கள்

காலம் :- 17.03.2004 (புதன்கிழமை)
நேரம் :- 10.00 மணி
இடம் :- நாவலர் கலாசார மண்டபம்

ஏற்கனவே இப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் இவ் வகுப்பிற்கு சமுகந் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்.

(சி-2322)

**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

## யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவித்தல்

**வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குடத்தனை கிராமத்தில் மணல் கும்பிகளிலிருந்து கட்டுமான வேலைகளுக்கு வெள்ளை மணல் அகழ்ந்து விற்றலுக்கான கோரிக்கை**

குடத்தனை கிராமத்தில் புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தினால் இனங்காணப்பட்டுள்ள மணற் கும்பிகளிலிருந்து புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தின் உரிமத்தின் கீழ் கட்டடப்பணிகளுக்கு மணல் அகழ்ந்து விற்பனை செய்யும் சேவையை மேற்கொள்ள விரும்பும் பதிவுசெய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு உ.அ.அ பிரிவின், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் நலன் விரும்பிகள், சமூக நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பதற்கான இறுதித் திகதி :- 2004.03.25

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி:**

அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் கடித இடதுபக்க மேல் மூலையில் "மணல் அகழ்வதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படவேண்டும்.

இச்சேவை தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்ட செயலக தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி-2320)

நிறைஞ்சனாஸ் சங்கானை

தனுஷ், அபர்ணா, கருணாஸ் நடித்த

புதுக்கோட்டையிலிருந்து சரவணன்



காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

STY KIDS - 2

(சி-2262)

ராஜா யாழ்ப்பாணம்.

சிம்பு, சோனியா அகர்வல், நாசர் நடித்த

கோவில்



10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)

அடுத்த வெளியீடு
மௌனம் பேசியதே

(சி-2263)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மருத்துவர் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது!

அரசாங்க மருத்துவர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவருவதற்காக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தியும் இணக்கப்பாடு ஏற்படவில்லை. இதனையடுத்து, வேலைநிறுத்தத்தை மேற்கொள்வதற்கு மருத்துவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமக்குள்ள சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரியே, கடந்த வாரம் முதல் அரசாங்க மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலைகளின் அவசர நோயாளர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால், வைத்தியசாலைகளில் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இவர்களுடைய சம்பள முரண்பாடு குறித்து நேற்று நண்பகல் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி மருத்துவ பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய போதிலும், இணக்கப்பாடு எதுவும் நேற்றும் ஏற்படாததையடுத்து இவர்கள் வேலைநிறுத்தத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். (01)

# எஸ்.பி.திசநாயக்கா மீது குற்றப்பத்திரிகை!

## தாக்கல் செய்ய உத்தரவு

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தை அவமதித்துப் பேசியதாக அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீது உயர்நீதிமன்றம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சட்ட மா அதிபரைக் கேட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுவினர் ஒருமனதாக எடுத்த தீர்மானத்திற்கமையவே அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீது குற்றப்பத்திரிகையைத் தாக்கல்செய்யுமாறு பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சட்ட மா அதிபரைக் கேட்டுள்ளார்.

நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக ஏன் திஸநாயக்கா தண்டிக்கப்படக்கூடாது என்ற கருத்துக்கமையவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## தேர்தல் பிரசாரங்களைத்...

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழர்கள், தமிழர்களே தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற கோஷத்தை வைத்துதான் எங்கள் வாக்குகளை சேகரிக்கவுள்ளோம்.

அது அவர்களுடைய விடயம். எங்களுடைய விடயம் முக்கியமாக எதை முன்வைத்தோமோ புலிகளே தமிழர்கள் தமிழர்களே புலிகள்தான் என்பதுதான் அதில் எந்தவித தடையுமில்லை. இருந்தபோதிலும் இவர்களின் பிரச்சினையில் முக்கியமாக நாங்கள் தலையிடாமல் இருப்போம் என்றார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 10 வேட்பாளர்களில் 8 பேர் கருணாவின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைப்...

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

நாட்டின் எதிர்காலத்தை நாசமாக்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டணி பல்வேறு முயற்சிகளையும் எடுத்துவருகிறது. இந்த முன்னணி நாட்டின் எதிர்காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் முன்வைத்திருக்கும் கொள்கைகள் - தமிழீழ விடுதலை புலிகளின் தற்கொலைப் படைப் போராளிகளை விடவும் அபாயகரமானது எனத் தெரிவித்தார்.

தற்கொலைப் போராளிகளால் உயிர்களையும், சொத்துக்களையுமே அழிக்கமுடியும் ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டின் எதிர்காலத்தை நாசமாக்கவே உள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கையில் பலியான...

கிரமசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஒன்றுகூடிச் செயற்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

2 ஆவது உலகப்போரில் மரணமடைந்த படைவீரர்களின் கல்லறைக்கு அருகிலேயே உயிரிழந்த இந்தியப் படையினரின் கல்லறைகளும் கொழும்பில் அமைக்கப்படவுள்ளன.

1987 - 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பிரேஷன் பவான்' நடவடிக்கையில் உயிரிழந்த 1155 படையினருக்கும் தனித்தனியாக கல்லறைகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பவான் நடவடிக்கையில் பங்குகொண்டு உயிரிழந்த இந்திய படையினருக்கு இந்தக் கல்லறைகளை அமைப்பதன்மூலம் அவர்கள் செய்த பணி அடையாளப்படுத்தப்படுவதாக இந்தப்படை நடவடிக்கையில் பங்குகொண்ட ஓய்வுபெற்ற படை அதிகாரியான ஜெனரல் அசோக மேத்தா தெரிவித்தார்.

இந்தக் கல்லறைகளை அமைப்பதற்கு இலங்கையின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல முக்கிய சக்தியாக செயற்படுகிறார்.

இது தொடர்பாக பலகல்ல தெரிவிக்கையில் -

இந்தக் கல்லறைகளின் வடிவமைப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக ஆராய ஒரு குழுவை இரண்டு வாரங்களுக்கு முன் கொழும்பிலிருந்து புதுடெல்கிக்கு அனுப்பினேன்.

இவ்வாறு சென்றவர்கள் இந்திய இராணுவ பொறியியலாளர்களால் வடிவமைக்கப்பட்ட மூன்று மாதிரி வடிவங்களைக் கல்லறையில் பொருததுவதற்கு எடுத்துவந்துள்ளனர்.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள இந்தக் கல்லறைகளுக்கான அடிக்கல் நாட்டும் விழாவிற்கு இந்திய அமைதிப்படையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற படையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யப்படவுள்ள நேரத்தில், இந்தியாவைத் திருப்திப்படுத்தவே இலங்கையால் இது மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இத்திட்டத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன் முன்னாள் இலங்கை இராணுவ அதிகாரி ஜெனரல் றொகான் தளுவத்த மேற்கொள்ளவிருந்தார். ஆனால், இலங்கையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை மீள் நினைவை ஏற்படுத்தும் முகமாக எந்தவொரு திட்டங்களையும் நாம் கொழும்பிற்கு வழங்கவில்லை என இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், விடுதலைப் புலிகளுடன் சண்டையில் ஈடுபடும்போது எமது கை பின்னால் கட்டப்பட்ட நிலையிலேயே போராடினோம் என முன்னாள் இந்திய படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தவேளை, அப்போதைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ எமது படைகளை திரும்பிச்செல்லுமாறு கூறியதும் எமது பணி இங்கே முடிவடைந்தது.

இந்த நிலையில் அப்போதைய இந்திய பிரதமர் வி.பி.சிங்கும், இந்திய படைகளை நாட்டுக்குத் திரும்பச் சொன்னதும், இவ்வாறு படையினர் திரும்பி சென்னை சென்றபோது கருணாநிதி தமிழர்களைக் கொண்ட படை என்று கூறியதும் இங்கே நினைவு கூரத்தக்கது என்கிறார் அந்தப் படையதிகாரி.

## சிப்பாயைத்...

இதன்போது, சுஜீவ பண்டார என்ற சிப்பாய் உயிரிழந்தார். இவரைச் சுட்ட சிப்பாய் டி.எம்.எல்.சுதந்த குமார என்ற சிப்பாய் ஆயுதத்துடன் தலைமறைவாகி விட்டார்.

துப்பாக்கி மற்றும் மூன்று ரவைக்கூடுகளுடன் தலைமறைவாகியுள்ள இராணுவச் சிப்பாயைத் தேடி நேற்றுமுன்தினம் இராணுவப்பொலிஸாரும், பொலிஸாரும் பலத்த சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீடு வீடாகவும், வீதிகளிலும் நேற்று முன்தினம் சோதனை நடத்திய படையினர் நேற்று தமது தேடுதலைத் தொடர்ந்தனர். ஆனால் காணாமற்போன சிப்பாயை கண்டு பிடிக்கும் முயற்சி இதுவரை வெற்றி பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினர் இரவு ரோந்து நடவடிக்கைகளை யாழ். நகரப் பகுதிகளில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வாக்களிப்பு நிலையங்கள்...

யும் தேர்தல் ஆணையாளர் நேற்று அழைத்திருந்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட முப்படைத்தளபதிகளும்- யுத்த சூனியப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை நிறுவும் திட்டத்தை நிராகரித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கைள அமைப்பது பாதுகாப்பற்றது எனவும், இராணுவ முன்னரங்க காவலரங்களுக்கு அண்மையில் இவற்றை அமைக்கலாம் எனவும் படையதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பான ஆய்வு அறிக்கை ஒன்றை தாம் களநிலை கட்டளை அதிகாரிகளுடன் ஆலோசித்துவிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் கையளிப்பதாக முப்படைத்தளபதிகளும் தெரிவித்தனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி படைத்தரப்பிடம் இருந்து கிடைக்கவுள்ள அறிக்கையை அடிப்படையாக வைத்து - புலிகளின் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கான இடம் குறித்த இறுதி முடிவு தேர்தல் ஆணையாளரினால் எடுக்கப்படும்.

இந்தச் சந்திப்பில் தேர்தல் தினத்தன்று நெடுந்தீவு மற்றும் மட்டக்களப்பின் சில பகுதிகளுக்கு வாக்குசசீட்டுக்கள், வாக்குப்பெட்டிகளை எடுத்துச் செல்வதற்கு விமானப்படையின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டது. (01)

## ஐ.தே.கவின் விஞ்ஞாபனம்...

வலுப்படுத்துவதும் முக்கிய குறிக்கோள்களாகும்.

ஒஸ்லோ பிரகடனம், ரோக்கியோ பிரகடனம், ரோக்கியோ தலைமைத்துவங்களில் தெரிவிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு அமைவாக இந்தத் தீர்வை எட்டுவதும் ஐ.தே.கவின் குறிக்கோள்களாகும்.

நாட்டு மக்கள் சமாதானத்தை வேண்டிநிற்கின்ற வேளையில், நாட்டின் பொருளாதார அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அமைதிச் சூழல் ஒன்று அவசியம்.

எவ்வித வேறுபாடுகள் இன்றி தமது செயற்பாடுகளின் திறமையுடன் நிர்வகிப்பதற்கு அதிகாரப் பரவலாக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை அனைத்துச் சமூகங்களுக்கும் உள்ளது என்பதை உறுதி செய்வது ஐ.தே.கவின் நோக்கம்.

முஸ்லிம் சமூகத்தைத் தனியான அமைப்பாகக் கொண்டு தேர்தல் முடிந்தவுடன் இயன்றதொரு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதும் தமது கட்சியின் நோக்கம் என்றும் ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பொரளையிலுள்ள ஜே.ஆர்.ஜெயவர்த்தன மன்றத்தில் வைத்து ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக் சமர விக்கிரமவால் வெளியிடப்பட்டபோது, இதன் முதற் பிரதியை பிரதமரும், கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டார். (01)

## ஜனாதிபதி...

ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் குறித்தும், எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் குறித்தும் எரிக் சொல்ஹெய்ம் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

## அடுத்த...

வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

சிறுபான்மை இனத்திலிருந்து ஒருவர் பிரதமராக வருவதை நான் மனப்பூர்வமாக விரும்புகின்றேன்.

அத்துடன் - சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதமராக வந்தால் நாட்டில் நிலவும் இனப்பிரச்சினையை சுலபமாகத் தீர்க்கமுடியுமெனவும் சந்திரிகா தெரிவித்தார்.


## மரண அறிவித்தல்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் டென்மார்க்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னுத்துரை தவமணி 13.03.04 சனிக்கிழமை டென்மார்ககில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற P.K.பொன்னுத்துரை (அல்வாய் வடக்கு) அவர்களின் அன்பு மனைவியும், காங்கேசன் (டென்மார்க்) அவர்களின் அன்பு மாமியாரும், ஜெகசோதி (பேபி) யின் அன்புத் தாயாரும், சுகுமார் (லண்டன்), கௌரி (லண்டன்), தர்ஷிகா (டென்மார்க்), யதுகுலன் (டென்மார்க்) ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் இறதிக் கிரியைகள் புதன்கிழமை (17.03.04) காலை 10.00 மணியளவில் டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மருமகன்

V.KANKESAN
PILEVEJ-1
7182 BREDSTEN
DENMARK.

T.P NO :- 75882066

கா.இராசரத்தினம்
நாவலடி,
அல்வாய் வடக்கு,
அல்வாய் (சி/2319)







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.03.2004 அன்று பொன்னுத்துரை, குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.